
# திருமறைத்தீபம்

BIBLE LAMP

மலர் 7 ஜூலை - செப்டம்பர் 2001 இதழ் 3

## எதிரிகள் ஜாக்கிரதை!



*"மனுசர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான்."*
*(மத்தேயு 13:25)*

# திருமறைத்தீபம்

**Issue No. 3 of 2001**

**ISBN 1173-7255**

காலாண்டுக்கொருமுறை வெளிவரும் திருமறைத்தீபம் சவரின் கிறேஸ் வெளியீடுகளினால் வெளியிடப்படுகின்றது. வேதசத்தியங்களை எடுத்துரைத்து கிருபையின் தேவனை மகிமைப் படுத்துவதே பத்திரிகையின் தலையாய நோக்கம்.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

**ஆசிரியர்: ஆர். பாலா**
**Editor:** R. Bala
**Publishers:** Sovereign Grace Publications
**Address:** Bible Lamp
P. O. Box 62 159
Sylvia Park
Auckland 1006
New Zealand
**Telphone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**email:** bala@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

**கொள்கைகளையும், கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.**

*- சி. எச். ஸ்பர்ஜன் -*
*1834-1892*



*பத்திரிகையை எழுதுவதிலும் அச்சேற்றுவதிலும் தடைகள் எதுவும் ஏற்படாமல் தன்னுடைய கிருபையால் எம்மைத்தாங்கி தீபம் அச்சேறக் கர்த்தர் தொடர்ந்து துணை புரிகின்றார். உங்களுடைய ஜெபங்களுக்கும், உற்சாகமூட்டும் கடிதங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி. அவசியமான கடிதங்களுக்கு பதிலெழுதவும் நாம் தொடர்ந்து முயற்சி செய்கிறோம்.*

*இன்று சீர்திருத்த விசுவாசத்தைப்* (Reformed Faith) *பற்றியதொரு தப்பான எண்ணம் வளர்ந்திருக்கிறது. கல்வினிச ஐங்கோட்பாடுகள்* (Five Points of Calvinism) *மட்டும்தான் சீர்திருத்த விசுவாசம் என்ற எண்ணத்தை சிலர் தங்களுக்குள் வளர்த்துக் கொண்டிருக்கின்றனர். இது ஆபத்தானது! கல்வினிச ஐங்கோட்பாடு இரட்சிப்பைப்பற்றிய வேதத்தின் அடிப்படைப் போதனை. ஆனால், அதைத்தாண்டிப்போக சிலருக்கு மனஉறுதி இல்லை. வேதம் போதிக்கும் அனைத்திற்கும் கட்டுப்பட இவர்கள் தயங்குகிறார்கள். சீர்திருத்தவாதிகளும், பியூரிட்டன் பெரியோரும் முழுமையான திருச்சபைச் சீர்திருத்தத்திற்காகப் போராடியவர்கள். அரைகுறையாக அது நிற்பதை அவர்கள் விரும்பவில்லை. வேதபோதனைகளுக்கெதிரான அனைத்தையும் களைந்தெறியும்வரை அவர்கள் அமைதி காணவில்லை. சீர்திருத்தத்தை அவர்கள் முடிந்து போனதொன்றாகக் கருதவில்லை. அதனால்தான் சீர்திருத்தவாதிகள் திருச்சபை "எப்போதுமே சீர்திருந்திக் கொண்டிருக்கின்றது"* (Semper reformanda - always reforming) *என்றனர். கல்வினிச ஐங்கோட்பாட்டையும், சீர்திருத்த விசுவாசத்தையும் இவ்விதழின் ஆரம்ப ஆக்கத்தில் விளக்கியுள்ளோம். சீர்திருத்தப் போதனைகளைக் கற்று வளர்ந்து கொண்டிருப்பவர்கள் சீர்திருத்த விசுவாசத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள இவ்வாக்கம் துணைபுரியும் என்று நம்புகிறோம்.*

*திருச்சபை வரலாறுபற்றி எழுதும்படி பலரும் கேட்டுக் கொண்டதற்கிணங்கி இவ்விதழில் ஆதித்திருச்சபையைப்பற்றி எழுதி அத்தொடரை ஆரம்பித்திருக்கிறோம். நமது கிறிஸ்தவம் வரலாற்றுக் கிறிஸ்தவம். நமது சத்தியங்கள் வரலாற்றில் உருப்பெற்று வளர்ந்தவை. சீர்திருத்தப் போதனைகளிலும், விசுவாசத்திலும் வளர்ந்து கொண்டிருப்பவர்கள் திருச்சபை வரலாற்றை அறிந்திருப்பது மிகவும் அவசியம்.*

*"தலித்" கிறிஸ்தவம் என்ற வார்த்தைப் பிரயோகத்திற்கு வேதத்தில் இடமுண்டா? தலித்துக்களுக்கு மெய்யான விடுதலை தரக்கூடியவர் யார்? என்றும் இவ்விதழ் விளக்குகிறது. சென்னையில் இருந்து வெளிவரும் சிற்றேடான "ரெட் டுளிப்" பையும் இவ்விதழில் விமர்சித்திருக்கிறோம். "சத்தியத்தை விளக்குவது மட்டும் நமது கடமையல்ல; அதற்கு முரணானவற்றை அடையாளங்கண்டு சுட்டிக் காட்டவும் வேண்டும்" என்கிறார் சீர்திருத்தப் போதகரான மொரிஸ் ரொபட்ஸ் (ஜனவரி–மார்ச் 2000). அது சத்தியமான வார்த்தை. வழமையான ஆக்கங்களும் தொடர்ந்து இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. வாசித்துப் பயனடையுங்கள். - ஆசிரியர்*

*கல்வினிச ஐங்கோட்பாடுகளும், சீர்திருத்த விசுவாசமும் ஒன்றா?*
*இக்கேள்விக்கு பதிலளிக்கிறது இவ்வாக்கம்*

# கல்வினிச ஐங்கோட்பாடுகளும், சீர்திருத்த விசுவாசமும்

சீர்திருத்தவாதியான ஜோன் கல்வினைப் பற்றி இவ்விதழில் பல தடவைகள் எழுதியிருக்கிறோம். பதினாறாம் நூற்றாண்டில் எழுந்த திருச்சபை சீர்திருத்தத்தில் கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட ஒரு பெருந்தலைவர் ஜோன் கல்வின். ஜெனீவாவில் சபை நிறுவி பல்லாண்டுகள் போதக ஊழியம் செய்து வேத சத்தியங்களில் மக்களை வழி நடத்தியவர் கல்வின். திருச்சபை சீர்திருத்தத்தில் பெரும் பங்கு வகித்தவர். பிரான்ஸின் அரசனுக்கு சீர்திருத்தக்கருத்துக்களை விளக்க அவர் ஒரு துண்டுப்பிரசுரமாக எழுத ஆரம்பித்து ஒரு பெரு நூலாக முடிந்தது அவரது அழியா கிறிஸ்தவப் போதனைகள். வேதத்தின் மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட நூல்களுக்கு விளக்கவுரை எழுதியவர் கல்வின். கல்வினுடைய அரும்பெரும் பணிகள் இவற்றுடன் முடிந்துவிடவில்லை. சீர்திருத்த இறையியலுக்கு வடிவம் கொடுத்த சீர்திருத்தவாதிகளில் இவரும் ஒருவர்.

கல்வினின் மறைவுக்குப்பின் அவரது சீர்திருத்தப் போதனைகளை எதிர்த்து அவற்றிற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டான் ஜேம்ஸ் ஆர்மீனியஸ் என்ற மனிதன். 1610 இல் அவனது மறைவிற்குப்பின் அவனுடைய சீடர்கள் ஐந்து கோட்பாடுகளை வெளியிட்டு திருச்சபைகளை சீர்திருத்தப் போதனைகளுக்கு எதிராகத் திருப்ப எத்தனித்தனர். இவர்களது போதனைகள் ஆர்மீனியனிசம் என்று இன்று சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. மீட்பிலும், இரட்சிப்பிலும் மனிதனுக்குப் பெரும் பங்கு உண்டென்றும், மனிதனின் ஒத்துழைப்பு இல்லாமல் கர்த்தரால் மனிதனை மீட்க முடியாது என்றும் ஆர்மீனியஸ் போதித்தான். அக்காலத்தில் திருச்சபைகள் சீர்திருத்தப் போதனைகளைப் பின்பற்றி விசுவாச அறிக்கைகளையும் கொண்டு நல்லபடியாக இயங்கி வந்து கொண்டிருந்தன. இதற்கு ஆபத்து ஏற்பட்டு விடக்கூடாது என்பதால் ஒல்லாந்து நாட்டில் திருச்சபைத் தலைவர்கள் இப்போதனைகளை ஆராய 1618 இல் டோர்ட் என்ற இடத்தில் ஒன்று கூடினார்கள். ஏழு மாதங்களில் 154 தடவைகள் அவர்கள் கூடி ஆர்மீனியனிசப் போதனைகளை ஆழமாக ஆராய்ந்தனர். அப்போதனைகள் வேதத்திற்கும், சீர்திருத்தப் போதனைகளுக்கும் முரணாக இருப்பதை உணர்ந்த அவர்கள் அவற்றிற்கெதிரான ஐங்கோட்பாடுகளை வெளியிட்டனர். தவறான போதனைகளை அளித்த ஆர்மீனியஸினுடைய சீடர்களும் நாடு கடத்தப்பட்டனர். திருச்சபைகள் ஆர்மீனியனிசப் போதனைகளின் ஆபத்திலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளவே டோர்ட் கவுன்ஸில் இதைச் செய்தது. இவ்வைங்கோட்பாடுகள் பின்பு கல்வினிச ஐங்கோட்பாடுகள் என்ற பெயரைப் பெற்றன. இதற்குக் கல்வினின் பெயர் கொடுக்கப்பட்டதன் காரணம் சீர்திருத்தவாதப் போதனைகள் தோன்றுவதற்கு கல்வின் அளித்த சிறப்பான பங்கே காரணம். இன்று இவ்வைங் கோட்பாடுகளைக் கல்வினிசப் போதனைகள் என்றும், இவற்றை விசுவாசித்துப் பின்பற்றுபவர்களை கல்வினிஸ்டுகள் என்றும் அழைப்பார்கள்.

இவ்வைங்கோட்பாடுகளாவன: 1) மனிதனின் முழுமையான சீரழிவு. 2) நிபந்தனையற்ற தெரிந்து கொள்ளல். 3) வரையறுக்கப்பட்டவர்களுக்கான மீட்பு. 4) தவிர்க்க முடியாத அழைப்பு. 5) பரிசுத்தவான்களின் விடாமுயற்சி என்பனவாகும். இவற்றை அவற்றின் முதல் எழுத்துக்களைப்பயன்படுத்தி ஆங்கிலத்தில் “டுளிப்” (Tulip) என்றும் அழைப்பர்.

இவ்வைங்கோட்பாடுகள் மீட்பையும், இரட்சிப்பையும் குறித்த வேதபோதனைகளை சுருக்கமாக விளக்குவதாக உள்ளன. இவற்றைக் கிருபையின் போதனைகள் என்றும் சுருக்கமாக அழைப்பர். மகத்தான தேவ கிருபையின் காரணமாகவே பாவியாகிய மனிதன் இரட்சிப்பை அடைகிறான் என்பதனால் அப்போதனைகள் இப்பெயர் பெற்றன. சுருக்கமாகச் சொல்லப்போனால் கல்வினின் இவ்வைங்கோட்பாடுகள் மனிதன் இரட்சிப்பை எவ்வாறு அடைகிறான் என்பதை விளக்குவதாக உள்ளன. தனது சொந்த முயற்சியாலா? அல்லது தேவ கிருபையினாலா? என்ற கேள்விக்கே இவை பதிலளிக்கின்றன. “பாவத்தில் இருக்கும் மனிதன் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள முடியாதலால் கர்த்தர் மட்டுமே அவனுக்கு இரட்சிப்பை அளிக்க முடியும். கர்த்தர் மட்டுமே இரட்சிப்பை அளிக்கக்கூடியவரானால் அவர் தன் சித்தப்படி சுதந்திரமாக எவருக்கும் அதனை அளிக்கக்கூடியவராக இருக்க வேண்டும். கர்த்தர் தன் சித்தப்படி வரையறுக்கப்பட்டவர்களுக்கு மட்டும் இரட்சிப்பை அளிப்பதாக ஆணையிட்டிருந்தால் அவர்களுக்காக மட்டுமே கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மீட்பின் செயல்களை நிறைவேற்றியிருக்க முடியும். கிறிஸ்து அவர்களுக்காக மட்டும் மரித்திருந்தால் அவர்கள் இரட்சிப்பை அடையும்படி பரிசுத்த ஆவி அவர்களைத் திட்ப உறுதியாக அழைப்பார். ஆகவே, ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை இரட்சிப்பு கர்த்தரிடம் இருந்து

**கல்வினின் ஐங்கோட்பாடுகள் சீர்திருத்த விசுவாசத்திற்கு அடிப்படையாகவும், ஆரம்பமாகவும் இருந்தபோதும் அவை மட்டுமே சீர்திருத்தப்போதனைகள் அல்லது சீர்திருத்த விசுவாசத்தின் ஆரம்பமும் முடிவும் என்று நாம் தவறாகக் கருதிவிடக்கூடாது.**

பெறப்படுவதாக இருப்பதால் பரிசுத்தவான்கள் நித்திய ஆனந்தத்தை அடையும்படி விடாமுயற்சி யுடன் பரிசுத்தமாக வாழ்வார்கள்." (Jack Seaton, Five Points of Calvinism) இதுவே, ஐங்கோட்பாடுகள்.

இன்று இக்கிருபையின் போதனைகளை கிறிஸ்தவர் கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. இரட்சிப்பை அடையாதவன் பரிசுத்த வாழ்க்கையை வாழ முடியாது; பரலோகமும் போக முடியாது; அவனால் கர்த்தரை மகிமைப்படுத்தி இவ்வுலகில் வாழ முடியாது. ஆகவே, இரட்சிப்பை எப்படி அடைவது என்ற கேள்விக்கான வேதபூர்வ மான பதில் இரட்சிப்பை அடைவதற்கான சரியான வழியை சுட்டிக் காட்டும். அச்சரியான வழியே சுவிஷேசப்போதனையின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும்; திருச்சபை மக்களால் விசுவாசிக்கப்பட வேண்டும். அச்சரியான வழியை நம்புவதால் மட்டுமே திருச்சபைக்குள் ஓநாய்கள் புகுவதைத் தடை செய்ய முடியும். ஆகவே, திருச்சபை வேதபூர்வமாக அமைவதற்கும், அது பரிசுத்தமாக இருப்பதற்கும் கல்வினின் ஐங்கோட்பாடுகள் திருச்சபைக்கு மிகவும் அவசியம். இதை அறியாத, விசுவாசிக்காத திருச்சபை ஊழியங்கள் வேதபூர்வ மாக அமைய முடியாது. அங்கு மனித ஞானப்படி யும், மனிதனின் வல்லமையின் அடிப்படையிலுமே ஊழியங்கள் நடந்து வரும். அங்கு மெய்யான பரிசுத்தத்திற்கு வழி இருக்க முடியாது. கர்த்தருடைய வழியில் இரட்சிக்கப்படாமல் மனிதனுடைய கிரியைகளின் அடிப்படையில் இரட்சிப்பை அடைந்தவர்கள்போல் பாவனை செய்பவர்களால் எப்படி பரிசுத்தமாக வாழ முடியும்? மெய்யான இரட்சிப்பும், அதன் நிச்சயமும் இல்லாத இடத்தில் தேவ வல்லமையைக் காண முடியாது.

கிறிஸ்துவின் மீட்பின் செயல்களையும், இரட்சிப்பை யும் வேதபூர்வமாக விளக்கிப் பதிலளிப்பதே கல்வினின் ஐங்கோட்பாடுகள். இதன் அவசியத்தை யும், இன்றைய காலகட்டத்தில் இதுபற்றிய அழுத்த மான, ஆழமான போதனையின் தேவையையும் நாம் மிகைப்படுத்த முடியாது. நாம் இதுவரை கூறிய தனைத்தும் சத்தியமாக இருந்தபோதும், கல்வினின் ஐங்கோட்பாடுகள் மட்டுமே சீர்திருத்தப் விசுவாசம் என்று நாம் தவறாக எண்ணிவிடக்கூடாது. இவ்வைங் கோட்பாடுகள் மெய்க்கிறிஸ்தவத்திற்கு அடிப்படை யான இரட்சிப்பு பற்றிய போதனையை அளித்த போதும் சீர்திருத்தப்போதனைகள் அனைத்தையும் இவை உள்ளடக்கவில்லை. இரட்சிப்பு அடைந்த மனிதன் எவ்வாறு வாழ்ந்து கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும் என்று இதனால் விளக்கமாக பதில் கூற முடியாது. அதற்கான பொதுவான பதிலையே இது அளிக்கின்றது. விசுவாசி இரட்சிப்பை அடைந்தபின் செய்ய வேண்டிய அவசிய மான, கட்டளைகளை இதனால் விளக்க முடியாது. விசுவாசி எப்படிப் பரிசுத்த மாக வாழ்வது என்றும் இதனால் விளக்க முடியாது. விசுவாசி இணைந்து வாழ வேண்டிய சபையைப்பற்றியும் இதனால் விளக்கமளிக்க முடியாது. விசுவாசி அறிந்து கொள்ள வேண்டிய அநேக வேத சத்தியங்களையும் இதனால் விளக்க முடியாது. கல்வினின் ஐங்கோட்பாடுகள் சீர்திருத்த விசுவாசத்திற்கு அடிப்படையாகவும், ஆரம்பமாகவும் இருந்தபோதும் அவை மட்டுமே சீர்திருத்தப் போதனைகள் அல்லது சீர்திருத்த விசுவாசத்தின் ஆரம்பமும் முடிவும் என்று நாம் தவறாகக் கருதிவிடக்கூடாது. காட்டாற்றில் விழுந்த ஒருவன் கரைசேர ஒரு கயிற்றைக் கொடுத்து விடுவதனால் அவன் மூழ்கிவிடாமல் கரை சேர்ந்து விட்டான் என்று நாம் சாதாரணமாக நம்பிவிடுவதில்லை. கயிறு அவன் கரை சேர்வதற்கு ஒரு ஆரம்பமே. கயிற்றின் அவசியத்தை நாம் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. கயிறில்லாமல் அவன் கரைசேரவே முடியாது; கயிறு அவசியம். ஆனால், கயிறு அவன் கரை சேர்வதற்கு ஓர் ஆரம்பம் மட்டுமே. அவன் கரை சேரச் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. ஆகவே, ஆரம்பமே முடிவாகிவிடாது.

ஆர். சீ. ஸ்பிரவுல் (R. C. Sproul) என்ற அமெரிக்க சீர்திருத்த போதகர் இதுபற்றி எழுதும்போது, "கல்வினிச ஐங்கோட்பாடுகளை மட்டுமே சீர்திருத்த வாத இறையியல் என்று அடையாளங் காணுவது இன்று பரவலாக வழக்கில் இருக்கின்றது. இந்த ஐங்கோட்பாடுகள் சீர்திருத்த இறையியலுக்கு அடிப்படையாக இருந்தபோதும் சீர்திருத்த இறையியலில் இதற்கு மேல் இன்னும் எவ்வளவோ இருக்கின்றது." என்று குறிப்பிட்டுள்ளார் (Grace Unknown, pg.29).

இதையெல்லாம் இவ்வளவு தூரத்திற்கு நான் விளக்கிச் சொல்வதற்குக் காரணமென்ன? கல்வினின் ஐங்கோட்பாடுகளும், சீர்திருத்தப் போதனைகளும் பரவிவரும் இந்நாட்களில், கல்வினின் ஐங்கோட்பாடு கள் மட்டுமே சீர்திருத்த விசுவாசத்தின் ஆரம்பமும் முடிவும் என்பதுபோல் சிலர் போதித்தும் நடந்து வருவதால்தான். கிருபையின் போதனைகளில் இவர்கள் வைத்திருக்கும் மதிப்பும் ஆர்வமும் அதற்கு மேல் போக முடியாதபடி ஒரு குட்டையைப்போல் தேங்கி நிற்கின்றன. கீறல் விழுந்த இசைத்தட்டைப் போல இவர்கள் கல்வினின் ஐங்கோட்பாடுகளையே சுற்றிச் சுற்றி வந்து கோண்டிருக்கின்றனர். கிருபையின் போதனைகள் எத்தனை அவசியமாக இருந்தபோதும் அதை வைத்து மட்டும் சீர்திருத்த சபை நடத்திவிட முடியாது என்பதை இவர்கள் அறியாதிருக்கிறார்கள். கல்வினின் போதனைகள் கிருபையின் போதனைக ளோடு நின்று விடவில்லை என்பதை கல்வினின் எழுத்துக்களை வாசித்தறிந்தவர்களுக்குப் புரியும்.

தன் நாட்டு அரசனுக்கு கிறிஸ்தவத்தைப்பற்றி விளக்கமாக எழுதிய கல்வின் திருச்சபை

சீர்திருத்தத்தை வலியுறுத்தி எழுதியதை அவருடைய நூல் Institute of Christian Religion விளக்குகின்றது. இன்நூலின் **1512** பக்கங்களைக் கொண்ட ஆங்கில மொழிபெயர்ப்பில் **700** பக்கங்கள் சபை சீர்திருத்தத்தைப்பற்றிப் போதிக்கின்றன. கல்வின் போதித்த, எழுதி வளர்த்த கல்வினிசம் ஐங்கோட் பாடுகளை மட்டும் கொண்டதல்ல; அதைவிடப் பெரியது. கல்வின் எழுதிய இப்பெரு நூல் தமிழில் மிகச்சுருக்கமாக "சீர்திருத்த திருச்சபையின் கொள்கை" என்ற தலைப்பில் வெளிவந்தது. (இது மூலநூலின் அனைத்துப் போதனைகளையும் தன்னில் கொண்டிருக்கவில்லை. முக்கியமாக திருச்சபை சீர்திருத்தத்தைப் பற்றி விளக்கும் மூல நூலின் நான்காவது பாகம் இதில் சேர்க்கப்படவில்லை.) தமிழில் இந்நூலுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்ட காரணம் கல்வினுடைய நூல் முழுமையான வேதபூர்வமான சபைச் சீர்த்திருத்தத்தைக் குறித்தது என்பதால்தான். 1543 இல் பேரரசன் 5ஆம் சார்ள்ஸ்க்கு சபை சீர்திருத்தத்தின் அவசியத்தைக் குறித்துக் கல்வின் ஒரு நூலையே எழுதி அனுப்பினார் (The Necessity of Reforming the Church). திருச்சபையில் பிரிவை ஏற்படுத்துவதாக அக்காலத்தில் தம்மைக் குறைகூறியவர்களைப் பார்த்துக் கல்வின் இந்நூலில், "ஒரு சபையின் பெயரைத் தூக்கி எறிந்துவிட்டால் மட்டும் போதாது. மெய்யான சபை எது? அதில் காணப்பட வேண்டிய உண்மையான ஐக்கியம் எது? என்று வேதபூர்வமாக ஆராய்ந்து, அறிந்து அவை இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று கூறியதோடு தொடர்ந்து, "ஆரோக்கியமான சத்தியத்திற்கு எதிரி என்று தனது பேச்சாலும், நடவடிக்கைகளாலும் காட்டிக் கொள்ளும் மனிதன் ஒரு சபையில் எத்தனை பெரிய பொறுப்பையும் பெயரையும் கொண்டிருந்தாலும் அவை அனைத்தையும் இழந்தவனாகிறான்" என்றும் எழுதினார்.

பியூரிட்டன் பெரியவர்களில் ஒருவரான ஜோன் ஓவன் 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த சீர்திருத்தவாதி. இறையியல் பற்றி பதினேழு வால்யூம்களை எழுதித் தள்ளியுள்ளார். அதில் பத்தாம் வால்யூமின் நான்கில் ஒரு பகுதி மட்டுமே தமிழில் சுருக்கமாக வெளியிடப்பட்ட "கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு". ஓவன் திருச்சபை சீர்திருத்தம் பற்றி நான்கு வால்யூம்களை எழுதியிருக்கிறார். இந்நான்கு வால்யூம்களும் திருச்சபை பற்றி எழுதப்பட்டுள்ள போதனைகளில் சிறப்பானவை. இவையனைத்தும் ஆங்கில மொழியில் உள்ளன. என்னுடைய போதக வாழ்வில் எத்தனையோ சீர்திருத்தப் போதகர்களைப் போல நானும் இவற்றை அடிக்கடி திறந்து பயன் படுத்திக் கொள்கிறேன். இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால் ஓவன் கல்வினின் ஐங்கோட்பாடுகளை மட்டும் வேதமாக எண்ணி அவற்றை மட்டும் சுற்றிவந்து கொண்டிருக்கவில்லை. பியூரிட்டன்கள் அனைவருமே திருச்சபையின் பரிசுத்தத்திற்காகப் போராடியவர்கள்.

இன்று தமிழ்கூறும் நல்லுலகில் தோன்றி பல சிரமங்களுக்கும் மத்தியில் தலைதூக்கி வரும் சீர்திருத்த திருச்சபைகள் கிருபையின் போதனைகளில் அவசியம் கவனம் செலுத்தி ஆத்துமாக்களுக்கு அவற்றை விளக்கமாகப் போதித்தபோதும், அவற்றோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. கல்வினசத்தையும், சீர்திருத்த விசுவாசத்தையும் அவர்கள் முழுமையாக அறிந்து கொள்ள முயல வேண்டும். (1689 விசுவாச அறிக்கையும், வினாவிடைப் போதனைகளும் சீர்திருத்தப் போதனைகளைத் தொகுத்து அளிக்கும் சாதனங்களாக இருக்கின்றன). அவர்கள் சபை சீர்திருத்தத்தில் ஈடுபட வேண்டும். கல்வினிசப் போதனைகளைப் பின்பற்றுகிறேன் என்று கூறி இயேசுவை ஏற்றுக் கொள்ள உங்கள் கரத்தைத் தூக்குங்கள் என்று சுவிஷேசக்கூட்டத்தில் அறிவிக்கும் மனிதர்களுக்கு கல்வினிசம் என்றாலே என்னவென்று தெரியாது. கிருபையின் போதனைகளைப் போதிக்கிறேன் என்று கூறி இந்திய சாஸ்திரங்களுக்கும், சித்தாந்தங்களுக்கும் விளக்கங் கொடுத்து வருகிறவர்களை கல்வின் உயிரோடிருந்தால் தன் பார்வையாலேயே சுட்டுப்பொசுக்கி இருப்பார்.

சபை என்ற பெயரில் தாம் நினைத்ததைச் செய்து வேதபூர்வமாக சபை அமைப்பதிலும், வேதபூர்வமாக போதக ஊழியம் அமைவதிலும் கவனம் செலுத்தாதவர்கள் சீர்திருத்தப் போதனைகளை அறியாதவர்கள். ஒரு கல்வினிச விசுவாசி பெந்தகோஸ்து இறையியல் கல்லூரியிலும், லிபரல் இறையியல் கல்லூரியிலும் பட்டம் பெறப் பாடுபடுவானா? சீர்திருத்தவாதிகள் தான் இதை அனுமதித்திருப்பார்களா? சபைக்குக் கட்டுப்படாமல், சபை கூடிவரும்போது ஆராதனையில் ஈடுபடாமல், சபை அனுமதியுடன் சபையால் அனுப்பப்பட்டு ஊழியங்களைச் செய்யாமல் கூடில்லாக் குருவிகளாக சொந்த ஊழியத்தில் ஈடுபடுபட்ட சீர்திருத்தவாதிகள் எவரையாவதும் சீர்திருத்த வரலாறு சந்தித்திருக்கிறதா? ஆராதனைக் கூட்டங்களில் பெண்களைப் பேசவைத்தும், காதைத்துளைக்கும் விதத்தில் டிரம் அடித்தும், கரங்களைத் தட்டி ஆடிப்பாடும் கூட்டத்திற்கும் சீர்திருத்தப் போதனைகளும் எந்தத் தொடர்பும் இருக்க முடியுமா? லூதரும், நொக்சும் இன்று உயிரோடிருந்தால் இவற்றைப் பார்த்துச் சகித்துக் கொண்டிருந்திருப்பார்களா? ஆராதனைக்கு வரும் போது அங்கு கர்த்தரின் ஆட்சியே நடக்க வேண்டும் என்ற தேவபயத்துடன், கட்டுப்பாடின்றி தறிகெட்டு ஓடப்பார்க்கும் சுய உணர்ச்சிகளுக்கு தடைபோட்டு, ஆராதனையை கர்த்தரின் வார்த்தைபடி நடத்த முயலும் சீர்திருத்தவாதிகள் நம்மில் எத்தனை பேர்? கர்த்தருக்குப் பயந்து ஆண்டவருடைய நாளை (ஓய்வு நாள்) அசிங்கப்படுத்தாமல் அவருடைய மகிமைக்காக மட்டும் பயன்படுத்தும் கல்வினிச விசுவாசிகள் எத்தனைபேர்? ஆத்துமாக்களுக்கு ஆத்ம உயிரளிக்கும் வேதப்பிரசங்கத்தை அக்கறையோடு தயாரித்து பிரசங்கம் செய்யும் கல்வினிசப் போதகர்கள் எத்தனைபேர்? அடித்தாலும் அசைய மாட்டேன் என்ற வைராக்கியத்தோடு சபையில் இருந்து சபை மக்களை மேய்க்கும், ஊர் சுற்றத் தெரியாத கல்வினிச சபைப் போதகர்கள் எத்தனைபேர்? தன்னை வளர்த்துக் கொள்ளவும், தனக்குப் பெருமை தேடிக்கொள்ளவும் சபை நடத்தாமல் கர்த்தருடைய மகிமைக்காக உழைக்கும் சீர்திருத்தவாதிகளை நாம் இன்று காண முடிகிறதா?

இதிலிருந்து கல்வினிச ஐங்கோட்பாடுகளே சீர்திருத்த விசுவாசமாகிவிடாது என்பது தெளிவாகப் புரிகிறதல்லவா? திருச்சபை சீர்திருத்தத்திற்காக தம் இரத்தத்தைச் சிந்தி, உயிரையே கொடுத்துழைத்தவர்கள் கல்வினிச சீர்திருத்தவாதிகள். அவர்களுடைய போதனைகளை அரைகுறையாகப் படித்துவிட்டு, அரைவேட்காட்டு சபைகளை அமைத்து, ஊழியங்களை நடத்தி நாம் சீர்திருத்தப் போதனைகளைப் பின்பற்றுகிறோம் என்று சொல்வது எப்படிச்

சரியாகும்? சபை என்பது என்னவென்று தெரியாத சபைப் போதகர்கள் இன்று நம்மத்தியில் அதிகமானோர். சபை ஊழியம் என்று தொடங்கி, கேட்டவர்களுக்கெல்லாம் இனிப்பு வழங்குவதுபோல் ஹோல்சேலாக ஞானஸ்நானம் கொடுத்து, திருருந்து வைத்து, சபை அங்கத்துவத்தையோ, சபை ஒழுங்கையோ, சபைக் கூட்டத்தையோ ஆத்துமாக்கள் அறியாதபடி செய்து சபை என்ற பெயரில் எதையோ செய்து கொண்டிருக்கும் கோமாளிகள்தான் எத்தனைபேர்? கல்வினிச சீர்திருத்தவாதிகள் இப்படியா சபை நடத்தினார்கள்? கல்வினின் போதனைகள் அடங்கிய Institute of Christian Religion ல் அரைவாசிக்குமேல் சபை அமைப்பையும், சபை வாழ்க்கையையும் பற்றியல்லவா போதிக்கிறது. பியூரிட்டன்கள் தங்கள் காலப்பகுதியில் சபை சீர்திருத்தத்திற்காகவும், சபை ஆராதனை ஒழுங்கிற்காகவும் போராடாத போராட்டமா? ஸ்பர்ஜன் பெயரையும், கேரியின் பெயரையும் அடிக்கடிச்சொல்லி அவர்கள் வழியில் வந்ததாகக் காட்டிக் கொள்ளுபவர்கள் ஸ்பர்ஜனும், கேரியும் செய்த சபை ஊழியத்தைக்குறித்து சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். கல்வினின் ஐங்கோட்பாட்டிற்கு மட்டும் இவர்களில் எவரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லையே!

சிலருக்கு பெந்தகொஸ்தேகாரர்களைத் திட்டிக் கொண்டிருப்பது மட்டுமே ஊழியமாக இருக்கின்றது. பெந்தகொஸ்தே குழுக்கள் நமக்கு ஒரு தலைவழிதான்; பெந்தகொஸ்தே போதனைகளும் தவறானவைதான்; அவற்றிற்கும் வேதத்திற்கும் எந்தத்தொடர்பும் இல்லை. இருந்தாலும், ஒருவர் பெந்தகொஸ்தே போதனைகளைக் கைவிட்டுவிடுவதனால் மட்டும் சீர்திருத்தவாதியாகிவிட முடியுமா என்ன? பெந்தகொஸ்தே போதனைகளை விட்டுவிட்டாலும் உங்கள் வாழ்க்கைமாறி அரிச்சுவடியில் இருந்து கல்வினிச சீர்திருத்தப் போதனைகளைத் தாழ்மையோடு கற்று சபை வாழ்க்கையில் வளராவிட்டால் உங்களுக்கும் சீர்திருத்தவாதத்திற்கும் எந்தத் தொடர்பும் இருக்க முடியாது.

கல்வினிச ஐங்கோட்பாடுகளை விசுவாசிப்பதால் மட்டும் ஒருவர் சீர்திருத்த விசுவாசத்தை அறிந்தவறென்றோ, அவற்றைப் பின்பற்றுபவர் என்றோ கருத முடியாது என்பதை இதுவரைத் தெளிவாகக் கண்டுள்ளோம். கல்வினிச ஐங்கோட்பாடுகளைவிட சீர்திருத்த விசுவாசம் பெரியது; விரிவானது; முழுமையானது. சீர்திருத்த விசுவாசத்தின் முக்கிய அம்சங்களை நாம் இனி சுருக்கமாகப் பார்ப்போம். இது சீர்திருத்த விசுவாசத்தில் ஆர்வம் கொண்டு வளர உங்களுக்குத் துணைபுரியுமானால் அதுவே இவ்வாக்கத்திற்குக் கிடைத்த பலனாகும்.

### 1) சீர்திருத்த விசுவாசம் வேதமே அனைத்தின் மீதும் சகல அதிகாரத்தைக் கொண்டுள்ளது என்றும், அதுவே நமது வாழ்க்கைக்கும், சபைக்கும் தேவையான அனைத்துப் போதனைகளையும் அளிக்கின்றது என்று விசுவாசிக்கின்றது.

சீர்திருத்தவாதிகள் இதைப் பெரிதும் வலியுறுத்தினர். வேதத்திலிருந்து தங்களுக்குத் தேவையானதை மட்டும் தெரிந்து கொள்ளும் பழக்கமும், தங்களுக்குப் பிடித்தமான முறையில் வேதத்திற்கு விளக்கம் கொடுக்கும் வழக்கமும் அவர்களிடம் இருக்கவில்லை. வேதம் கர்த்தருடைய சித்தத்தின் வெளிப்பாடு என்பதை அவர்கள் நம்பியதால் வேதத்தோடு விளையாடுவதை அவர்கள் விரும்பவில்லை. வேதத்தைத் தெளிவாகப் படித்துப் புரிந்து கொள்வது அவர்களுடைய இலட்சியமாக இருந்தது. வேதத்திற்கு தாம் நினைத்த விதத்தில் விளக்கம் கொடுக்க அவர்கள் எப்போதுமே முற்படவில்லை. வேதம் தெளிவாகப் போதிக்கும் அனைத்தையும் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கடைப்பிடிக்க அவர்கள் தவறவில்லை. ஆகவேதான், சீர்திருத்தவாதத்தின் முக்கிய போதனைகளில் ஒன்றாக "வேதம் மட்டுமே" (Sola Scripture) என்ற கோட்பாடு அமைந்திருக்கின்றது. இதையே 17ம் நூற்றாண்டுப் பியூரிட்டன் பெரியோரும் பின்பற்றினர். வேத போதனைகளை காலத்திற்குதவாததாகவும், நடைமுறைக்குப் பொருந்தாததாகவும் அவர்கள் கனவில்கூட சிந்தித்துப் பார்க்கத் தயங்கினர். இத்தகைய ஆழமான நம்பிக்கை ஏற்பட நாம் வேதத்தை முறையாக, தெளிவாகப் படிக்க வேண்டும். சீர்திருத்தவாதிகளின் வாழ்க்கையின் சகல பகுதிகளை யும், அவர்களுடைய சபைகளையும் வேதமே ஆண்டது. வேதம் மட்டுமே நம்மையும், நமது சபைகளையும் ஆளவேண்டுமென்பதற்காகவே அவர்கள் விசுவாச அறிக்கைகளையும், வினாவிடைப் போதனைகளையும் விளக்கமாக எழுதி வைத்தனர்.

கல்வினிச ஐங்கோட்பாட்டிற்கு மட்டும் இடம் கொடுத்து வேதத்தின் ஏனைய போதனைகளுக்கு இடம் கொடுக்க மறுப்பவர்களை எப்படி சீர்திருத்தவாதத்துடன் சம்பந்தப்படுத்த முடியும்? சபையில் கூடிவருபவர்கள் ஆசைப்பட்டபடியும், தாம் நினைத்தவிதத்திலும் செயல்படுபவர்களுக்கும் சீர்திருத்தப் போதனைகளுக்கும் எப்படித் தொடர்பிருக்க முடியும்? கர்த்தரின் திட்டப்படியும், வார்த்தைபடியும் சபையையும், சபை ஆராதனையையும், சபையோடு சம்பந்தமான அனைத்துக் காரியங்களையும் கொண்டு நடத்த மறுத்து தன்னிச்சையாக நடந்து வருபவர்களுக்கும் சீர்திருத்தக் கோட்பாடுகளுக்கும் எந்தவிதத்தில் தொடர்பிருக்க முடியும்? கல்வினிச ஐங்கோட்பாட்டிற்கு அப்பால் போக நமது கால்கள் மறுக்கின்றனவா? வேதம் தெளிவாகப் போதிக்கும் ஞானஸ்நானத்தில் நமக்கு நம்பிக்கை இருக்கிறதா? வேதம் தெளிவாகப் போதிக்கும் ஓய்வு நாளை நாம் பயத்துடன் கடைப்பிடிக்கிறோமா? வேதம் நாம் கடைப்பிடிக்கும்படியாக கட்டளையிட்டுக்கூறும் பத்துக் கட்டளைகளை நாம் பின்பற்றுகிறோமா? நமது, தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம், போதக ஊழியம், சபை அனைத்துமே வேதத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கின்றதா? ஊழியம் செய்ய வேண்டும் என்ற சுயநல நோக்கத்தாலும், யாரோ பணம் கொடுக்கிறார்கள் என்பதற்காகவும் சத்தியத்தை விற்று சபை நடத்திக் கொண்டிருக்கிறோமா? ரோமன் கத்தோலிக்க சபையோடும், தவறான போதனைகளைப் பின்பற்றும் சபைகளுடனும், ஆர்மினியனிச, டிஸ்பென்ஷேசனல் கோட்பாடுகளைப் பின்பற்றும் கிறிஸ்தவ நிறுவனங்களுடனும் கூட்டுவைத்து சத்தியத்தை அடமானம் வைத்திருக்கிறோமா? தவறு என்று தெரிந்தபோதும் அதைக் கண்டித்துத் திருத்தப்பயந்து, திருந்த மறுத்து யூதாஸைப்போல் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? இக்கேள்விகளுக்கு இருதய சுத்தத்துடன் நம்மால் பதிலளிக்க முடிகின்றதா? வேதத்தின் கட்டுப்பாட்டுக்குள் வராத எதுவும் கர்த்தரின் ஆளுகைக்குள்

அடங்கவில்லை. சீர்திருத்தவாதிகள் வேதத்திற்குக் கொடுத்த அதி உயர்ந்த இடத்தை சீர்திருத்தக் கோட்பாடு களில் தங்களுக்கு ஆர்வமிருப்ப தாகக் காட்டிக்கொள்ளும் பலர் இன்று கொடுக்கத் தயங்குகிறார்கள். இந்நிலை தொடரும்வரை அவர்கள் வாழ்க்கையிலும் சபையிலும் சீர்திருத்தம் நிச்சயமாக ஏற்பட முடியாது.

**ரோமன் கத்தோலிக்க சபை கர்த்தருடைய வேதத்தை நிராகரித்து திருச்சபையையும், ஆராதனையையும் மனித ஞானப்படி நடத்தி வந்ததால்தான் சீர்த்திருத்தவாதமே வரலாற்றில் எழுந்தது.**

### 2) சீர்திருத்த விசுவாசம் திருச்சபை சீர்திருத்தத்தை வலியுறுத்திப் போதிக்கின்றது.

சீர்திருத்த விசுவாசத்தை விளக்கும் விசுவாச அறிக்கைகள் வேதபூர்வமாக வரையறுக்கப்பட்ட ஆராதனைக்குரிய தத்துவத்தை (The Regulative Principle of Worship) விளக்குகின்றன. சீர்திருத்த பாப்திஸ்து போதகர்களில் ஒருவரான சாம் வோல்டிரன் (Sam Waldron) The Regulative Principle of the Church என்ற ஒரு சிறு நூலை வெளியிட்டார். இதில் நமது பியூரிட்டன் பெரியோர்களால் விளக்கப்பட்ட Regulative Principle ஐ விரிவாக்கி அவை சபைக்கும் பொருந்தும் என்று வோல்டிரன் வலியுறுத்துகிறார். வோல்டிரனுடைய வாதத்தில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. பியூரிட்டன் பெரியோர்கள் காலத்தில் இத்தத்துவம் ஆராதனை சம்பந்தமாக ஏற்பட்ட ஒரு பிரச்சனை காரணமாக ஆரம்பித்த போதும் அத்தத்துவம் ஆராதனைக்கு மட்டுமே பொருத்த மானது என்று கூறிவிட முடியாது. இத்தத்துவம், கர்த்தரின் ஆராதனை கர்த்தரின் வார்த்தைபடி அமைய வேண்டும் என்று கூறுகிறது. அதாவது மனித ஞானத்தின்படியும், உலகப்பிரகாரமாகவும் ஆராதனை அமையக்கூடாது என்பதே இத்தத்துவமாகும். இப்பொதுவான தத்துவம் நிச்சயம் சபை அமைப்புக் கும், சபை சம்பந்தமான காரியங்களுக்கும் உரியது. கர்த்தருடைய திருச்சபை கர்த்தருடைய வார்த்தைபடி அமைய வேண்டும் என்பததே இத்தத்துவத்தின் போதனையாகும்.

ரோமன் கத்தோலிக்க சபை கர்த்தருடைய வேதத்தை நிராகரித்து திருச்சபையையும், ஆராதனையையும் மனித ஞானப்படி நடத்தி வந்தததால்தான் சீர்த்திருத்த வாதமே வரலாற்றில் எழுந்தது. சீர்திருத்தவாதிகள் வேதபூர்வமாக எல்லாம் அமைய வேண்டும் என்றும், திருச்சபை வேத போதனையின்படியே அனைத்தையும் செய்ய வேண்டும் என்று போதித்தனர். ஆகவே, இன்று சபை சீர்த்திருத்தம் அவசியமாகிறது. பாரம்பரியத்தையும், தனி மனித துதிபாடுதல்களையும் மூட்டைகட்டி வைத்துவிட்டு வேதபோதனைகளைப் பின்பற்றி சபை அமைத்தலில் ஈடுபட வேண்டும். போதக ஊழியத்தில் இருந்து சபையின் அனைத்துப் பகுதிகளிலும் இன்று சீர்திருத்தம் தேவையாயிருக்கிறது. சபை சபையாக இருக்க, அதற்கு அமைப்புவிதியும், அங்கத்துவமும் தேவை. அங்கத்தவர்களே இல்லாமல் சபைகள் இன்று ஓடிக் கொண்டிருக்கின்றன. சபையைச் சேர்ந்தவர்கள் யார்? என்பது சபைக்கு வருபவர்களுக்கே தெரிவதில்லை. சபை எதை விசுவாசிக்கின்றதென்பதை எந்தவித வெட்கமோ, பயமோ, தயக்கமோ இல்லாமல் அறிவிக்கும் 1689 விசுவாச அறிக்கையும், வினாவிடைப் போதனைகளும் இன்று சபைக்குத் தேவை. ஆர்ச் பிசப், பிசப், அருள்திரு, அறிவர் என்ற பட்டங்களுக்கெல்லாம் துதி பாடும் பழக்கத்தை விட்டுவிட்டு வேதம் போதிக்கும் அடையாளங்களை மட்டும் கொண்ட போதகர்கள் சபை நடத்த வேண்டிய அவசியமும் இன்று ஏற்பட்டுள்ளது. போதகர்களும் சபையாலேயே தெரிவு செய்யப்பட வேண்டும். லிபரல் மற்றும் சமயசமரசக் குளருபடியுள்ள வேதாகமக்கல்லூரிகளுக்குப்போய் போதகர்களாக வரப்பார்க்கும் பொய்யான ஊழியமுறையும் அடியோடு தவிர்க்கப்பட வேண்டும். வேதபூர்வமான இலக்கணங்களைக் கொண்டு வேத அடிப்படையில் சபையால் தெரிவு செய்யப்பட்ட மூப்பர்கள் சபையை ஆளுவது இன்று அவசியமாகிறது. சேவை மனப்பான்மையை மட்டும் கொண்ட உதவியாளர்கள் சபை நிர்வாகத்தைக் கவனிக்கும்படி நியமிக்கப்பட வேண்டும். சீர்திருத்தக் கோட்பாடுகளை வைராக்கியத்தோடு பின்பற்றி உழைக்கும் சபைப் போதகர்கள் இன்று மிகக்கவனத்துடன் தங்கள் பிரசங்க மேடைகளைப் பாதுகாக்க வேண்டும். அங்கே போலிகளுக்கும், சீர்திருத்தவாதிகள் போல் பாவனை செய்து கொண்டிருப்பவர்களுக்கும் இடமளிக்கக் கூடாது. அரைவேட்காட்டுப் பிரசங்கிகளுக்கும், ஐங்கோட்பாடுகளை மட்டும் விசுவாசித்து முழுச் சீர்திருத்தத்திற்கும் இடங்கொடுக்க மறுக்கும் மாயமான் களுக்கும் இடமளிக்கக்கூடாது. சீர்த்திருத்தவாதத்திலும், வேதபூர்வமான சீர்த்திருத்த சபை அமைப்பிலும் ஆர்வம் கொண்டவர்கள் இத்தகைய முற்போக்கான சபை அமைப்பு முறைக்குத் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். சமுதாயமும், உலகமும் என்ன நினைக்குமோ என்று பயந்தும், பாரம்பரியத்துக்கு மதிப்புக் கொடுத்தும் சீர்திருத்தவாதிகள் பின்வாங்கி யிருந்தால் இன்று நாம் சபை சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசும் நிலையே ஏற்பட்டிருக்காது. மனிதனுக்கு பயப்படுவது என்பது சீர்திருத்தவாதிகளின் அகராதியில் எப்போதுமே இருக்கவில்லை.

### 3. சீர்திருத்த விசுவாசம் கர்த்தர் ஏற்றுக்கொள்ளத் தக்க ஆராதனையை மட்டுமே கர்த்தருக்கு வழங்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்டுள்ளது.

சமீபத்தில் ஒரு பெண் விசுவாசி என்னைப் பார்த்து, ஐயா! சபையில் பெண்கள் வேதம் வாசிப்பதிலும், பேசுவதிலும் என்ன தவறு என்று கேட்டார்? அதற்கு நான், அம்மா! இதில் எனக்கென்று ஒரு தனிக் கொள்கை இல்லை. கர்த்தர் தன் வேதத்தில் இதற்கு அனுமதி கொடுக்காததால் இதை நாம் செய்யக்கூடாது என்று சொன்னேன். புதிய ஏற்பாடு தெளிவான விளக்கங்களைக் கொடுத்து இதைத்தடை செய்கிறது. அந்தப் பெண் விசுவாசியும் அதை ஏற்றுக்கொண்டார். சபை ஆராதனையைப் பொறுத்தவரையில் வேதம் கர்த்தரின் கட்டளைகள் மட்டுமே பின்பற்றப்பட

**சமுதாயமும், உலகமும் என்ன நினைக்குமோ என்று பயந்தும், பாரம்பரியத்துக்கு மதிப்புக் கொடுத்தும் சீர்திருத்தவாதிகள் பின்வாங்கி யிருந்தால் இன்று நாம் சபை சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசும் நிலையே ஏற்பட்டிருக்காது.**

வேண்டுமென்று போதிக்கின்றது. இன்று மனித ஞானத்திற்கும், உணர்ச்சிகளுக்குமே அதிக முக்கியத்து வம் கொடுக்கப்படுவதால் இவ்வுண்மை அநேகருக்குப் புலப்படாமலிருக்கிறது. ஆராதனை என்றால் நாம் நினைப்பதையும், விரும்புவதையும் கர்த்தரிடம் கொண்டு வரலாம் என்று பலரும் நம்புகிறார்கள். காயினின் ஆராதனையைக் கர்த்தர் ஏற்றுக் கொள்ளாததற்குக் காரணமே அவனது ஆராதனை கர்த்தரின் வார்த்தையின்படி அமையாததுதான் என்பது அவர்களுக்குப் புரிவதில்லை. சிலருக்கு ஆராதனை வேளையில் எதையும் செய்ய வேண்டும் என்ற ஒரு "கிக்" ஏற்படுகிறது. கை தட்டாவிட்டாலோ அல்லது உடல் அசைந்தாடாவிட்டாலோ அவர் களுக்கு ஆராதித்ததுபோல் தோன்றுவதில்லை. இதெல்லாம் வெறும் மாம்சத்திற்குரிய சொந்த உணர்ச்சியே தவிர வேறில்லை என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. நாம் ஏற்கனவே கூறியது போல் கர்த்தர் ஆராதனை குறித்த ஒருவிதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். அதாவது, அவரது ஆராதனை அவர் வார்த்தைபடி இருக்க வேண்டு மென்பதுதான் அவ்விதி. இதையே ஆங்கிலத்தில் The Regulative Principle of Worship என்று அழைப்பர். வேதம் போதிக்கும் இவ்விதிக்கு உருவம் கொடுத்து இதைப் பெரிதும் விளக்கிப் போதித்தார்கள் நமது சீர்திருத்தப் பெரியோர்கள். எனவே, கர்த்தரின் ஆராதனை சபையில் வேதபூர்வமாக அமைய வேண்டும். இவ்வாராதனைத் தத்துவம் திருச்சபை ஆராதனை வேளைகளில் வேதம் கட்டளையிட்டுப் போதிக்கும் - பிரசங்கம், போதகரின் ஜெபம், வேத வாசிப்பு, சங்கீதம், கீர்த்தனைகள், பாடல்கள் என்பவற்றின் மூலம் துதித்தல், திருவிருந்து, காணிக்கை எடுத்தல், திருமுழுக்கு ஆகியனவற்றை மட்டுமே ஆராதனையின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்று போதிக்கின்றது. இவற்றைத் தவிர ஆராதனையில் வேறு எவற்றையும் சேர்க்கக்கூடாது என்பது கர்த்தரின் கட்டளை. *1689* விசுவாச அறிக்கையும் இதையே விளக்குகிறது. தனிநபர் பாடலுக்கோ, கச்சேரிக்கோ, தேவைக்கதிகமான இசைக்கருவிகளுக்கோ, கைதட்ட லுக்கோ, ஸ்தோத்திரம் என்ற பெயரில் அனைவரும் சேர்ந்து பேசுவதோ (இதை தமிழ் நாட்டில் மட்டும் தான் நான் பார்த்திருக்கிறேன்) ஆராதனையில் இடம் பெறக்கூடாது. ஆராதனை கர்த்தரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடக்கும் போதே அது கர்த்தரால் ஏற்றுக் கொள்ளப்படும் ஆராதனையாக இருக்கிறது என்பது வேதம் போதிக்கும் உண்மை.

"ஆராதனையில் நம் விருப்பப்படி எதையும் செய்யக் கூடாதா?" என்று எவராவது கேட்கலாம். நண்பனே! ஆராதனை என்பதே கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டது தான். அதை நாம் கண்டுபிடிக்கவில்லை. அதை ஏற்படுத்திய கர்த்தர் இப்படித்தான் ஆராதிக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதால் அவர் விருப்பப்படி ஆராதிக்கும் போதுதான் அவருக்கு அது திருப்தி கரமாக இருக்கிறது. தனக்குத் திருப்தி இல்லாதவற்றை அவர் எப்போதுமே நிராகரிக்கத் தவறவில்லை (லேவியர் 10:1-3).

சிலர், "நீங்கள் சொல்வது தவறு. நாம் எதையும் ஆராதனையில் செய்யலாம். ஆனால், அவற்றை முழு இருதயத்தோடும், விசுவாசத்தோடும் செய்தால் கர்த்தர் ஏற்றுக் கொள்வார்" என்று சொல்வார்கள். இது தவறான வாதம். ஏனெனில் தாவீதின் நண்பன் ஊசா உடன்படிக்கைப் பெட்டியை இருதயசுத்தத்தோடு தான் தொட்டு அது ஆடுவதைத் நிறுத்தி சரிப்படுத் தப் பார்த்தான் (2 சாமுவேல் 6). ஆனால், கர்த்தர் அவனைத் தண்டித்தார். கர்த்தர் தாவிதிடம் பேசியபோது ஊசாவின் இருதயம் பாழாயிருந்தது என்று சொல்லவில்லை. தான் ஏற்கனவே கட்டளையிட்டபடி அவன் செய்யவில்லை என்று தான் சொன்னார். இதேபோல் பல உதாரணங்களை நாம் வேதத்தில் இருந்து காட்ட முடியும். என்வே, நாம் நினைத்ததை, அவற்றை எத்தனை இருதய சுத்தத்தோடு கர்த்தருக்கு முன் வைத்தாலும் அவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

வேறு சிலர், "கர்த்தருடைய வார்த்தை கட்டளை யிட்டு, செய்யாதே! என்று சொல்லாத காரியங்களை ஆராதனையில் சேர்த்துக்கொள்ளலாம்" என்பார்கள். 17ம் நூற்றாண்டில் ஆங்கிலேய திருச்சபை (Church of England) இவ்விதமாகவே வாதம் செய்தது. ஆங்கிலேய சபையின் விசுவாச அறிக்கையான 39 விதிகளில் (39 Articles) 12 ம் விதி - "விசுவாசத்தைக் குறித்த காரியங்களில் எதையும் தீர்மானிக்கும் அதிகாரத்தையும் ஆராதனைக்குரிய எந்தவிதமான சடங்குகளைச் செய்யும் அதிகாரத்தையும் சபை கொண்டிருக்கிறது" என்று கூறுகிறது. இவ்விதமான போதனையை Normative Principle of Worship என்று அழைப்பார்கள். இவ்வாதத்திற்கு எதிராக பியூரிட்டன் பெரியோர்கள் போராடி வேதம் போதிக்கும் ஆராதனை விதிகளை நிலை நாட்டினர். இவற்றை மட்டும்தான்தான் ஆராதனையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கர்த்தர் வலியுறுத்திக் கூறும்போது அக்கட்டளை மற்ற எல்லாவற்றையுமே தடைசெய்கின்றது என்றும், ஆகவே, அவர் கட்டளை யிட்டு செய்யாதே என்று சொல்லாதவற்றை ஆராதனையில் சேர்க்கலாம் என்று கூறுவது பெருந்தவறு என்று பியூரிட்டன் பெரியோர்கள் போதித்தனர். பாரம்பரிய சபைகள் (Traditional Churches) அனைத்திலும் இன்று பியூரிட்டன் பெரியோர்கள் போதித்த ஆராதனைத் தத்துவங் களுக்கு எதிரானமுறையிலேயே ஆராதனை நடைபெற்றுவருகின்றது. உதாரணத்திற்கு சி. எஸ். ஐ சபைகளை எடுத்துக் கொள்ளலாம்.

வேதம் போதிக்கும் வரையறுக்கப்பட்ட ஆராதனைத் தத்துவத்திற்கு எதிராக வாதம் செய்பவர்கள், "அவர் பெண்களைப் பேசக்கூடாது என்றுதானே சொன்னார், வாசிக்கக்கூடாது என்று சொல்ல வில்லையே. அதனால் அவர்கள் சபையில் உரத்த சத்தமிட்டு வேதம் வாசிக்கலாம்" என்று

சொல்வார்கள். இவ்வாதம் சரியா? என்று பார்ப்போம். முதலில் ஆராதனை ஆண்களான போதகர்களால் நடத்தப்பட வேண்டும். அவர்களோ மூப்பர்களோ அல்லது அவர்கள் அனுமதிக்கும் ஆத்மவிருத்தியில் முதிர்ச்சியுள்ள வேறு ஆண்களோ தான் வாசிக்க வேண்டும். சபையில் வேதம் வாசிப்பது என்பது அதிகாரபூர்வமான செயல். போதகர்கள், மூப்பர்களாகிய ஆண்களுக்கே உரிய அதிகாரபூர்வமான செயல்கள் எதையும் சபை கூடி வரும்போது பெண்கள் செய்யக்கூடாது. இதனால் தான் 1 கொரிந்தியர் 14 ஆவது அதிகாரத்தில் பவுல் கர்த்தரிடம் இருந்து வெளிப்படுத்தலைப் பெற்று "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தர வில்லை; அவர்கள் அமர்ந்திருக்க (அமைதியாக இருக்க) வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லு கிறது." என்று கூறியுள்ளார். வேதமும் அப்படியே சொல்கிறது என்று பவுல் கூறுவது முழு வேதத்தையும் குறித்ததாகும். இங்கே "பேசாமலிருக்கக்கடவர்கள்" என்ற வார்த்தைக்கு வாயைத் திறந்து சத்தமிட்டுப் பேசாதீர்கள் என்று பொருள். ("பேசாதே" என்றால் "பாடாதே" என்றும் அர்த்தம் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத சம்மட்டிகள் இல்லை நாம்.) பெண்கள் எல்லோரும் பாடும்போது சேர்ந்து பாடலாம். தனியாக சபைகூடிவரும்போது, போதிக்கவோ, பாடவோ, வேதத்தை எழுந்து நின்றோ, அமர்ந்த நிலையிலோ எல்லோரும் கேட்கும்படியாக வாசிக்க அனுமதியில்லை. இது முழு வேதமும் போதிக்கும் உண்மை என்று பவுல் கூறும்போது நம்புத்தி மட்டும் வேறுவிதமாகப் போகப் பார்ப்பது தவறு. சீர்திருத்தவாதிகள் அன்றும் இன்றும் தங்கள் சபைகளில் பெண்கள் இந்தவிதமாக நடந்து கொள்ள அனுமதித்ததில்லை. வேதத்திற்கு அடிபணிந்து கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் மாற்றிக் கொள்ளமுடியாதவர்களுக்கும் சீர்திருத்த வாதத்திற்கும் சம்பந்தமிருக்க முடியாது.

கர்த்தர் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆராதனையில் வேதபிரசங்கத்திற்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதன் மூலம்தான் கர்த்தர் தன் ஆத்துமாக்களோடு பேசுகிறார். அப்பிரசங்கங்களைப் படித்துத் தயாரித்து வேதபூர்வமாக பிரசங்கிக்காத மனிதர்கள் சீர்திருத்தவாதிகளாக இருக்க முடியாது. படித்துத் தயாரித்துக் கொடுக்கப்படும் பிரசங்கங்களை ஆவியானவர் பயன்படுத்தமாட்டார் என்று நம்பிக் கொண்டிருக்கும் மலுங்கிப்போன ஒரு போலிக் கிறிஸ்தவம் தமிழ் மக்களை இன்று ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. சபை, சபையாக பிரசங்கம் என்ற பெயரில் ஆத்துமாக்களைத் திட்டிக் கொண்டும், கதை சொல்லியும், சொந்த வாழ்க்கை அனுபவங்களைச் சொல்லித் தம்பட்டம் அடிப்பதுமே பல போதகர் களுக்கு இன்று வழக்கமாக இருக்கின்றது. அத்தோடு தங்கள் திறமையைக் காட்டிக் கொள்ள இசையிலும், பாட்டிலும் நேரத்தை செலவிட்டுக் கொண்டிருக்கி றார்கள். ஆராதனையை மியூசிக் கன்டெஸ்டாகவும், தனி மனிதத் துதிபாடலுக்காகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள். இந்நிலமை மாற வேண்டும். பிரசங்கம் என்ற பெயரில் செய்யப்படும் அட்டூழியங்களும், அதைச் செய்பவர்களும் திருச்சபை யிலிருந்து அகற்றப்பட வேண்டும். ஆராதனையில் தனி மனித துதிபாடுதல் நிர்த்தாட்சன்யமின்றி விலக்கப்பட வேண்டும்; வேதப்பிரசங்கங்களால் அது அலங்கரிக்கப்பட வேண்டும்.

இவையே சீர்திருத்த விசுவாசம் போதிக்கும் ஆராதனைத் தத்துவம். சீர்திருத்தவாதியாக இருந்து நீ வாழும் காலத்தில் கர்த்தருக்குப் பிரியமான முறையில் சபை நடத்த ஆசைப்படுகிறாயா நண்பனே! இவ்வாராதனைத் தத்துவத்தை நீ சபையில் நடைமுறைக்குக் கொண்டுவரும்போது இதுவரை தன் உணர்ச்சிகளுக்கும், தனிமனித வழிபாட்டுக்கும் தூபம் போட்டுக் கொண்டிருந்த அறிவில்லாத மந்தைகள் அதைத்தடுக்கப் பார்க்கும். வேதத்தை விரித்து வசனங்களை எடுத்துக்காட்டி விளக்கி அவர்களுக்கு கர்த்தரின் வழிமுறைகளைக் காட்டு. சிலர் உன்னைக் குறைகூறுவார்கள், சிலர் உன்னைத் தொலைக்கப் பார்ப்பார்கள், வேறுசிலர் ஓடியும் விடுவார்கள். ஆனால், சத்தியத்திற்காக தம்மைப் பணயம் வைத்துழைத்த நமது பெரியோர்களை அப்போது நினைத்துக்கொள். அன்போடு, அதேநேரம் உறுதியுடன் போதி. எதிர்க்கும் கூட்டம் சிந்திக்கும் நாள் வரும்; சீரடையும். ஓடுகிற கூட்டம் எப்போதுமே நிலைக்காது. அது ஓடட்டும்; அதனால் நமக்கு எந்தப் பயனும் இல்லை. அது பரலோகம் போகிற கூட்டமாக இருக்காது.

### 4. சீர்திருத்த விசுவாசம் விசுவாசிகள் பத்துக்கட்டளைகளைப்பின்பற்றிப் பரலோகம் போகும்வரை பரிசுத்தமான வாழ்க்கையை இவ்வுலகில் வாழவேண்டுமென்று போதிக்கின்றது.

பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் இருக்கும் தொடர்பையும் ஒற்றுமையையும் புரிந்து கொள்ளாதவர்கள் செய்யும் பெரும் தவறு பழைய ஏற்பாடு இஸ்ரவேலருக்கும் புதிய ஏற்பாடு கடவுளின் மக்களுக்கும் உரியது என்ற செயற்கையான போதனையைப் போதிப்பதுதான். டிஸ்பென்ஷேசன லிசத்தின் இப் பெருந்தவற்றால் வேதம் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. தேவனுடைய மக்களும் இரண்டாகப் பிரிக்கப்படுகிறார்கள். அத்தோடு வேதபோதனைகள் அனைத்துமே இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரு வேறு மக்களுக்கு வெவ்வேறுவிதமாகக் கொடுக்கப்பட்ட தாகப் போதிக்கப்படுகிறது. இத்தவறான போதனை யின் விளைவாகத்தான் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டு மக்களுக்கு சொந்தமானதல்ல என்ற போதனை உருவாகி பழைய ஏற்பாட்டுக் கட்டளை களைப் புதிய ஏற்பாட்டு மக்கள் இன்று கடைப் பிடிக்கத் தேவையில்லை என்ற விளக்கம் கொடுக்கப் படுகிறது. இது வேதம் போதிக்காத மிகவும் செயற்கை யான மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு போதனை. இதனை ஆரம்பித்து வைத்த பெருமை ஜோன் நெல்சன் டார்பியைச் (John Nelson Darby) சாரும். இதை உலகம் பூராவும் பரப்பிய பெருமை ஸ்கோபீல்டைச் (Scofield) சாரும்.

ஆனால், சீர்திருத்த விசுவாசம் பழைய புதிய ஏற்பாடு இரண்டையும் கொண்ட ஒரே நூலாக வேதம் இருப்பதாகவும், கர்த்தருக்கு சொந்தமான ஒரே மக்கள் கூட்டம் மட்டுமே இருப்பதாகவும் போதிக்கின்றது. பழைய ஏற்பாட்டு விசுவாசிகளும், புதிய ஏற்பாட்டு விசுவாசிகளும் இரட்சிப்பை ஒரேவிதமாக அடைந்து இவ்வுலகில் கண்களை மூடியதும் பரலோகத்திற்கே போகிறார்கள் என்றும் போதிக்கின்றது. அவர்கள் இவ்வுலகில் விசுவாசிகளாக வாழும்போது கர்த்தரின்

பத்துக்கட்டளைகளைத் தம்வாழ்வில் தவறாது கடைப்பிடித்து வாழ வேண்டும் என்றும் போதிக்கின்றது. பத்துக்கட்டளைகள் எக்காலத்திற்கும் தேவையானது என்பது சீர்திருத்த விசுவாசத்தின் அசைக்க முடியாத போதனை. அது போதிக்கும் ஓய்வு நாளையும் விசுவாசிகள் இன்று பின்பற்ற வேண்டும் (மன மகிழ்ச்சியூட்டும் ஓய்வு நாள் என்ற ஆக்கத்தை வாசிக்கவும்). பத்துக்கட்டளையே விசுவாசி இவ்வுலகில் கண்மூடும்வரை கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நியதியாக இருக்கின்றது.

**5. சீர்திருத்த விசுவாசம் வேதபூர்வமான நற்செய்தி ஊழியத்தில் ஈடுபட்டு சபைகளை எல்லா இடங்களிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற வாஞ்சை கொண்டது.**

இந்திய மண்ணில் இன்று மதமாற்றத்திற்கெதிராக ஏற்பட்டிருக்கும் பேரெதிர்ப்புக்கு கிறிஸ்தவர்கள் என்று தம்மை அழைத்துக் கொண்டு கிறிஸ்தவ ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் ஒரு முக்கிய காரணம் என்பதை சொல்லிப் புரிய வைக்கத் தேவையில்லை. இயேசுவுக்கு கிராமம் கிராமமாகப் போய் சிலுவைக்கொடியேற்றுகிறோம் என்று சொல்லி கிராமங்களுக்குப் போய் அங்கே கொடியேற்றி அக்கிராமங்களை இயேசுவுக்காக வென்று விட்டோம் என்று அறிக்கையிடும் இயேசுவுக்குத் தெரிந்திராத, வேதம் அறியாத சுவிஷேச ஊழியங்களை இந்திய மண்ணில்தான் பார்க்க முடியும். பிராமணர்கள் வாழும் அக்கிரஹாரத்துக்குப்போய் பேய்விரட்டுகிறோம் என்றுகூறி இயேசுவின் நாமத்தால் அக்கிரகாரத்தை சுற்றிச் சுற்றி வந்து ஜெபம் செய்த ஒரு பெந்தகோஸ்தே ஊழியரை நான் டெலிவிஷனில் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு வாரமும் பத்துபேரை இயேசுவிடம் கொண்டுவந்துவிட வேண்டுமென்று தன் ஊழியர்களுக்குக் கட்டளையிட்டு கிறிஸ்தவ ஊழியம் செய்யும் ஒரு பெரிய கிறிஸ்தவ நிறுவனத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு வருடத்தில் பட்டிதொட்டி எல்லாம் ஆயிரம் சபைகளை அமைப்பது என் இலட்சியம் என்று என்னிடம் சொன்ன ஒரு போதகரையும் நான் அறிவேன். இத்தகைய ஞானசூன்யமான செயல்களால் ஆத்திரமடையாத மக்கள் இருக்க முடியுமா? இதை வேதம் எங்கே சுவிஷேச ஊழியம் என்று போதிக்கிறது? கிறிஸ்துவின் பெயரில் செய்யப்படும் இத்தகைய வரட்டுத்தனமான செயல்கள் இந்து முன்னணி போன்ற இயக்கங்களுக்கு நொறுக்குத்தீனி போடாமல் வேறென்ன செய்யும். சுவிஷேச ஊழியம் என்ற பெயரில் பெரும் அட்டூழியங்கள் தமிழ் பேசும் மக்கள் வாழும் எல்லா நாடுகளிலும் இருந்து வரும் இக்காலத்தில் சுவிஷேச ஊழியத்தை வேதபூர்வமாக கொண்டு நடத்த வேண்டிய பெரும் பொறுப்பு சீர்த்திருத்த விசுவாசத்தைப்பின்பற்றத் துடிக்கும் சபைகளுக்கு இருக்கிறது.

வேதபூர்வமாக சுவிஷேச ஊழியம் செய்ய வேண்டுமா? அதற்கான வேதம் போதிக்கும் வழிகளைப் பார்ப்போம்.

***1) சுவிஷேசத்தை வேதபூர்வமாக பிரசங்கிக்கவும், அறிவிக்கவும் வேண்டும்.***

இன்று சுவிஷேசப் பிரசங்கம் என்றுமில்லாதவகையில் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. சுவிஷேச ஊழியம் என்ற பெயரில் பாதர் பேர்க்மன்ஸ் போன்றோர் நடத்தும் கூத்துக்களும், பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டத்தாரின் சுகமளிக்கும் விழாக்களும் வேதம் போதிக்கும் கிறிஸ்துவின் சுவிஷேசத்தை இன்று முழுதாக ஆத்துமாக்கள் அறியாதபடி மறைத்து வைத்துள்ளன. கிறிஸ்துவின் மீட்பின் செயல்களையும் அதனால் ஏற்படும் பலன்களையும் இன்றைய சுவிஷேசப் பிரசங்கங்கள் விளக்குவதாக இல்லை. சுகமளிப்பதற்காகவும், பசி தீர்ப்பதற்காகவும் மட்டுமே கிறிஸ்து இவ்வுலகு அனுப்பப்பட்டதுபோல் பிரசங்கங்கள் அமைந்துள்ளன. இவற்றை நம்பாதவர்களும் கூட சுவிஷேசத்தை சரியாகப் பிரசங்கிப்பதில்லை. இயேசு உன்னை நேசிக்கிறார் என்ற வாசகத்தைக் கேள்விப்படாதவர்கள் இருக்க முடியாது. அதை மட்டும் சொல்பவர்கள் பாவிகளை அவர்களுடைய பாவத்திலிருந்து விடுவிப்பதற்காக கிறிஸ்து கல்வாரி சிலுவையில் என்ன செய்தார் என்பதை விளக்குவதில்லை. சுவிஷேசப் பிரசங்கத்தின் தரம் மிகவும் குறைந்ததுள்ளது. இதன் காரணமாக கிறிஸ்துவைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாத, விசுவாசத்தையே அடையாதவர்களுக்கெல்லாம் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டுகின்றது.

இந்நிலை மாற வேண்டும். சுவிஷேசப் பிரசங்கத்தில் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும். வேதபூர்வமாக சுவிஷேசம் மறுபடியும் பிரசங்கிக்கப்பட வேண்டும். போதகர்கள் சுவிஷேசப் பிரசங்கத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். வேதத்தைப் படித்து, ஆராய்ந்து, ஜெபத்துடன் வேதவசனங்களைத் தெரிவு செய்து சுவிஷேசப்பிரசங்கம் தயாரிக்கப்பட வேண்டும். இன்று தமிழர் மத்தியில் பிரபலங்கள்போல் தெரியும் சுவிஷேசகர்கள் பாகவதர்களாகவும், திறமையாகக் கதை சொல்லி ஆத்துமாக்களின் மனதைக் குளிர வைப்பவர்களாகவும்தான் இருக்கிறார்கள். ஆனால், சுவிஷேசம் கிறிஸ்துவை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். அவருடைய பரிகாரப்பலியை விளக்குவதாக இருக்க வேண்டும். மனந்திரும்புதலையும், இரட்சிப்பையும்பற்றிப் போதிப்பதாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் இலவசமாகக் கொடுக்கும் நித்திய ஜீவனை ஆத்துமாக்கள் கேட்கவும், பெற்றுக் கொள்ளவும் பரிசுத்த ஆவி பயன்படுத்தும் சாதனமாக இருக்க வேண்டும். சீர்திருத்தத்தில் ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுவிஷேசப்பிரசங்கத்தை ஆர்வத்துடன், கவனத்துடன் தயாரிக்காமல் இருக்க முடியாது.

சுவிஷேசத்தை பிரசங்கத்தின் மூலம் அளிப்பது மட்டுமே நமது கடமையே தவிர அதற்கு மேலாக எதையும் செய்ய முயலக்கூடாது. ஆத்துமாக்களைக் கர்த்தரிடம் கொண்டு வரும் பணி ஆவியானவருக்கே உரித்தானது. அதை நாம் எந்தவிதத்திலும் செய்ய முயலக்கூடாது. அதை நாம் செய்ய வேண்டும் என்று வேதம் போதிக்கவில்லை. அமெரிக்காவின் சார்ள்ஸ் பினி ஆரம்பித்துவைத்து, பில்லி கிரகேம் பெரிதும் பயன்படுத்திய அர்ப்பண அழைப்பு முறை வேதத்திலேயே காணமுடியாததொன்றாகும். இதை இயேசுவோ, அப்போஸ்தல்ர்களோ அறிந்திருக்கவோ, பயன்படுத்தியதோ இல்லை. இம்முறை தவறானது மட்டுமல்ல கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்கே எதிரானதுமாகும். இது பற்றி நாம் பலமுறை இப்பத்திரிகையில் எழுதியுள்ளோம். இதுபற்றி மேலும் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் ஜிம் அடம்ஸ் என்ற போதகர் எழுதிய தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு என்ற நூலை எமக்கு எழுதிப் பெற்றுக்

கொள்ளலாம். ஆத்துமாக்களின் உணர்ச்சிகளைத் தூண்டியும், அவர்களை வற்புறுத்தியும் கிறிஸ்துவிற்காக தீர்மானம் எடுக்க வைப்பது வேதம் அறியாத ஒரு செயல். இத்தகையசெயல் பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்காக வல்லமையற்ற போலிக்கிறிஸ்தவர் களையே எங்கும் தோற்று வித்திருக்கிறது.

**சபையில் தோன்றி எழாத எந்த ஊழியத்தையும், சபை அறியாத எந்த மனிதனையும் (அம் மனிதன் எத்தனை பிரபல்யமானவராக இருந்தபோதும்; ஆத்துமாக்களைக் கவரக்கூடிய சினிமாக் கவர்ச்சி கொண்டவராக இருந்தபோதும்) சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் ஆதரிக்கக் கூடாது.**

சீர்திருத்த கிறிஸ்தவர்கள் இவற்றில் நம்பிக்கை வைப்பதில்லை. அவர்கள் கிறிஸ்துவின் ஆவி மட்டுமே ஆத்துமாவுக்கு இரட்சிப்பை அளிக்கக்கூடியது என்று நம்புகிறார்கள். ஆகவே, அவர்கள் ஜெபத்துடன் பிரசங்கத்தைத் தயாரித்து, ஆத்மபாரத்துடன் பிரசங்கிப்பதை மட்டுமே தங்களுடைய தொழிலாகக் கொண்டுள்ளார்கள். ஆத்துமாக்களுடன் பேசுவதையும், அவர்களைத் தம்மிடம் அழைத்துக் கொள்வதையும் இயேசுவிடமே விட்டுவிடுகிறார்கள். சுவிஷேசத்தைக் கேட்டு ஒருவர் தான் கர்த்தரை அறிந்து கொண்டேன் என்று கூறினால் அவர்கள் சாட்சியத்தைக் கேட்டு அறிந்தபின்பே ஞானஸ்நானம் கொடுக்க முற்படுவார்கள். ஊருக்கொரு கடை வைப்பதுபோல் சுவிஷேச ஊழியத்தை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் சீர்திருத்த விசுவாசிகளுக் கில்லை. மற்றவர்கள் தம்மை மதிக்க வேண்டுமென்ப தற்காகவும், சமுதாயத்தில் பேரெடுக்கவும், தாம் பணம் பெறும் வெளி நாட்டாரைத் திருப்திப் படுத்தவும் ஊழியம் செய்யும் நிர்ப்பந்தம் அவர்களுக் கில்லை. சுவிஷேசத்தை, சுவிஷேசமாக தேவபயத் துடன் மட்டும் சொல்லி கர்த்தருக்கே எல்லா மகிமையும் சேரட்டும் என்ற வைராக்கியத்துடன் வாழ்பவர்களே சீர்திருத்த விசுவாசிகள்.

### 2) சுவிஷேச ஊழியம் சபையாக, சபையால் அனுப்பப்பட்டு செய்ய வேண்டும்.

சுவிஷேச ஊழியம் இன்று இட்லி, தோசை விற்கும் பிளாட்பாரத்துக் கடைகள் போல் கேட்பாரில்லாமல் எங்கும் முளைத்து விடுகிறது. இதை யார் செய்ய வேண்டும்? எப்படி செய்ய வேண்டும்? என்ற விவஸ்தை இல்லாமல் யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் செய்யலாம் என்ற விதத்தில் நடந்து வருகின்றது. இது வேத போதனைக்கு முரணானதாகும். சீர்திருத்த கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்கும் அவருடைய வேதத்திற்கும் கட்டுப்பட்டவனானபடியால் கிறிஸ்து போதிக்கும் விதமாக அவருடைய சபைக்குக் கட்டுப்பட்டே இந்த ஊழியத்தில் ஈடுபடுவான். இயேசுவால் பயிற்சி கொடுக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் திருச்சபையை ஏற்படுத்தி சுவிஷேச ஊழியத்தை திருச்சபை மூலமாகவே செய்தார்கள் என்பதை அப்போஸ்தல நடபடிகள் விளக்குகின்றது. தனி ஊழியத்தையும், சொந்த ஊழியத்தையும் கிறிஸ்துவோ அவருடைய அப்போஸ்தலர்களோ அறிந்திருக்கவில்லை.

இன்று சுவிஷேச ஊழியம் பலருக்கு private business ஆக இருக்கின்றது. ஊழியமே செய்ய அருகதை இல்லாத பலர் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளப் பயன்படுத்திக் கொள்ளும் ஏணியாக இருக்கின்றது. இவர்களை யாரும கட்டுப்படுத்துவது இல்லை; இவர்களும் எவருக்கும் கட்டுப்படாதவர்கள். சீர்திருத்தக் கிறிஸ்தவர்களும், போதகர்களும் இத்தகைய சந்தர்ப்பவாதிகளை தங்களுடைய சபைக்குள் நுழையவிடக்கூடாது. சபையில் தோன்றி வளராத எந்த ஊழியத்தையும், சபை அறியாத எந்த மனிதனையும் (அம்மனிதன் எத்தனை பிரபல்யமானவராக இருந்தபோதும்; ஆத்துமாக்களைக் கவரக்கூடிய சினிமாக்கவர்ச்சி கொண்டவராக இருந்தபோதும்) சீர்திருத்தக் கிறிஸ்தவர்கள் ஆதரிக்கக் கூடாது. அதுவும் சீர்திருத்தப் போதனைகளுடன் சம்பந்தமில்லாதவர் களோடு நமக்குத் தொடர்பிருக்கக்கூடாது. சீர்திருத்த விசுவாசத்தை நம்புபவர்கள் சபையால் தெரிவு செய்யப்பட்ட நம்பத்தகுந்த, விசுவாசத்திலும், வேதத்திலும் தேர்ந்த ஆத்துமாக்களையே சுவிஷேச ஊழியம் செய்யப்பயன்படுத்துவார்கள். ஆத்துமாக்கள் அனைவருமே கிறிஸ்துவைப்பற்றி அவரை அறியாத வர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்றாலும், ஒவ்வொரு ஆத்துமாவும் வேதப்பாடம் நடத்த வேண்டும் என்றும் திருச்சபை அமைக்க வேண்டும் என்றும் வேதம் போதிக்கவில்லை. ஆத்துமாக்கள் சபையோடு தம்மை இணைத்துக் கொண்டு சபையாக எல்லா ஊழியங்களையும் செய்ய வேண்டுமென்று தான் வேதம் போதிக்கின்றது. அதுவும் பெண்கள் போதகர்களாகவும், சுவிஷேச ஊழியர்களாகவும் பணி செய்வது வேதம் போதிக்கும் முறையல்ல. கிறிஸ்துவின் வார்த்தைபடி ஊழியங்கள் அமையும் போது அவை கிறிஸ்துவுக்கு மகிமை சேர்க்கின்றன. மனித ஞானத்தின்படி செய்யப்படும் அனைத்தும் மனிதனுக்கே மகிமை சேர்க்கின்றன.

### 3) சுவிஷேச ஊழியம் சபை அமைப்பதில் போய் முடிய வேண்டும்.

சுவிஷேச ஊழியங்களின் இறுதி நோக்கம் சபை அமைப்பதே. ஆத்துமாக்களுக்கு கிறிஸ்துவைப்பற்றி சொல்வது மட்டுமல்ல சுவிஷேச ஊழியத்தின் பணி. சுவிஷேசத்தை வேதபூர்வமாக அறிவித்து, அதனைக் கேட்டு மனந்திருந்தி கிறிஸ்துவை விசுவாசித்தவர்கள் சபைக்கும் இணைக்கப்பட வேண்டும். சபையே இல்லாத இடங்களில் அவர்களைக் கொண்டு சபைகள் அமைக்கப்பட வேண்டும். இன்று திருச் சபையையே பார்க்காத, திருச்சபை என்றால் என்னவென்றே அறியாத அநேகர் விசுவாசிகள் என்று தம்மை அறிவித்துக் கொண்டு ஊரெங்கும் காணப்படு வது நாமறிந்த ஒன்றே. இவர்களது வாழ்க்கையே அநேக சுவிஷேச ஊழியப் பச்சோந்திகளுக்கு பணம் கொடுப்பதிலும், பணிபுரிவதிலும் போய் முடிகின்றது. சீர்திருத்த விசுவாசத்தைப் பின்பற்றுபவர்கள் தங்களுடைய சுவிஷேசப்பணி சபைக்கு ஆத்துமாக் களைக் கொண்டு வருவதிலும், சபை அமைப்பதிலும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். சீர்திருத்த

(20 ஆம் பக்கம் பார்க்க)

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

*கேள்வி:52 இரண்டாவது கட்டளை என்ன?*

*பதில்: இரண்டாம் கட்டளையாவது, மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒர சொருபத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக்குறித்துப் பிள்ளைகளுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறேன். என்னிடத்தில் அந்புகூர்ந்து என் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் காட்டுகிறவராய் இருக்கிறேன் என்பதாகும்.*

*யாத்திராகமம் 20:4-6.*

*கேள்வி:53 இரண்டாம் கட்டளை எதைப் போதிக்கின்றது?*


*பதில்: இரண்டாம் கட்டளை, கர்த்தர் தன் வார்த்தையில் போதிக்கும் ஆராதனை முறைகளையும், திருநியமங்களையும் நாம் ஏற்று முழுமையாகவும் பரிசுத்தமாகவும் பின்பற்ற வேண்டுமென்று போதிக்கின்றது.*

*உபாகமம் 12:32*

**விளக்கக்குறிப்பு:** *நாம் ஆரம்பத்தில் பத்துக்கட்டளை களைப்பற்றி எழுதியபோது முதல் நான்கு கட்டளை களும் கர்த்தரை நாம் எப்படி ஆராதிக்க வேண்டு மென்று போதிப்பதாகக் கூறினோம். முதலாவது கட்டளை கர்த்தர் யார் என்று விளக்குகிறது. இரண்டாவது கட்டளை அவரை நாம் எப்படி ஆராதிக்க வேண்டும் ென்று தெளிவாகக் கூறுகிறது. அதாவது நம்மைப் படைத்த கர்த்தர் கட்டளையிட் டுள்ளபடி அவரது ஆராதனை அமைய வேண்டும் என்று போதிக்கின் றது. ரோமன் கத்தோலிக்கரும், லூதரன் சபையைச் சேர்ந்தவர்களும் இவ்விரண்டாம் கட்டளை முதலாவது கட்டளையுடன் சேர்ந்தது என்றும், இது தனியாக விஷேசமாக ஒன்றையும் போதிக்கவில்லை என்றும் கூறுவர். ஒரே காரியத்தைப் போதிப்பதற்கு இரண்டு கட்டளைகள் தேவையில்லை தான். ஆனால், கர்த்தரை நாம் எப்படி ஆராதிக்க வேண்டுமென்று போதிக்க நமக்கு நிச்சயம் ஒரு கட்டளை தேவை தான். ஆகவே, ரோமன் கத்தோலிக்கரும், லூதரன் சபையாரும், ஆங்கிலிக்கன் சபையாரும் கொடுக்கும் விளக்கம் மிகவும் தப்பானது. இவ்விரண்டாம் கட்டளையைத் தனியாக நாம் பிரித்துப் பார்க்கா விட்டால், கர்த்தரை எப்படி ஆராதிப்பது என்று போதிப்பதற்கு நமக்கு ஒரு கட்டளையுமே இருக்காது.*

*இக்கட்டளை எதைப் போதிக்கிறதமன்றால், நாம் கர்த்தரை மனித ஞானப்படி ஆராதித்தலாகாது என்பதைத்தான். (சீர்திருத்த விசுவாசம் இதைக்குறித்து என்ன போதிக்கின்றது என்பதைச் சுருக்கமாக இதே இதழில் கல்வினின் ஐங்கோட்பாடுகளும், சீர்திருத்த விசுவாசமும் என்ற ஆக்கத்திலும் விளக்கியுள்ளோம்.) இதைப்பற்றி விளக்கும் ஒரு வரைபடத்தை நாம் பார்ப்பது நல்லது* (G. I. Williamson).

*இவ்வரைபடத்தைக் கூர்ந்து பார்த்தால் வேதத்தால் அனுமதிக்கப்பட்டவை மட்டுமே மெய்யான ஆராதனையின் பகுதிகளாக இருக்கும் என்பது சீர்திருத்த விசவாசத்தைப் பின்பற்றுபவர்களின் கருத்து என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே, மெய்யான ஆராதனையின் பகுதிகளாக, வேத வாசிப்பு, பிரசங்கம், ஜெபம், சங்கீதங்கள், கீர்த்தனை கள், ஞானப்பாடல்கள் பாடுதல், திருவிருந்து,*



திருமுழுக்கு ஆகியவையும், காணிக்கை எடுத்தலும் காணப்படும். இதிலிருந்து சீர்திருத்த விசுவாசத்தின் ஆத்மீக தன்மையுடைய எளிமையான ஆராதனை முறையை நாம் அடையாளங்காண முடிகின்றது. ஆனால், ரோமன்கத்தோலிக்க, லூதரன், மற்றும் ஆங்கிலிக்கன், சீ. எஸ். ஐ, பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் சபைகளில் (வரைபடத்தில் “ஆ” காட்டப்பட்டுள்ளது போன்ற) இதற்கு மாறான ஆராதனை முறைகளையே பார்க்க முடியும். இவர்களுடைய நம்பிக்கையின்படி மெய்யான ஆராதனையில் கர்த்தரால் கட்டளையிட்டுத் தரப்பட்டுள்ளவற்றிற்கு மிகச் சிரிய இடமே அளிக்கப்படும். எனவே, சடங்காச்சாரியங்கள், பிசப்பு மார் அணியும் அங்கி, சிலுவை, மெழுகுவர்த்தி, சிலைகள் ஆகியவையும் மேலும் வேறு பலவும் சேர்த்துக் கொள்ளப்படும். பெந்தகொஸ்தே, கெரிஸ் மெட்டிக் சபைகளில் ஆடல், பாடல், கச்சேரி, தனி மனித துதி என்று வேறுபலவும் ஆராதனையில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றன. சில சபைகள் ஆத்துமாக்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்பதற் காக வாலிபர்களுக்கான ஆராதனை நாள், பெண்களுக்கான ஆராதனை நாள், சிறுவர்களுக்கான ஆராதனை நாள் என்று ஆராதனையில் செய்யக் கூடாததையெல்லாம் செய்கிறார்கள். இவர்கள் எல்லோருமே கர்த்தர் கட்டளையிட்டு செய்யாதே என்று சொல்பவற்றை மட்டுமே நாம் செய்யக்கூடாது. அதைத்தவிர்ந்த வேறு எதையும் ஆராதனையில் சேர்த்துக் கொள்ள நமக்கு அனுமதி உண்டு என்று நம்புகிறவர்களாக இருக்கிறார்கள். அவர்களோடு பேசிப்பார்த்தால், இதைச் செய்யக்கூடாது என்று வேதத்தில் எங்காவது சொல்லியிருக்கிறதா? என்று வேதமே தெரியாது வரட்டு வாதத்தில் ஈடுபடுவார்கள். இவர்களுக்கு வேதம் தரும் பதில் என்னவென்றால், “கட்டளையாகக் கர்த்தர் சொன்னவற்றை மட்டுமே ஆராதனையில் செய்” என்பதுதான்.

சிலைகளையும், உருவங்களையும்வைத்து ஆராதிக் காதே, என்று கர்த்தர் தன் பத்துக்கட்டளைகளில் சொல்லுகிறார். ஆனால், இவர்களோ சிலையோ உருவமோதான் வைக்கக்கூடாது, ஆனால், மேரியின் உருவத்தை ஆராதிக்கக்கூடாது என்றோ, சிலுவை வைத்து வணங்கக்கூடாதென்றோ சொல்லவில்லையே என்று வாதாடுவாக்ள். (தமிழ் சபைகள் பெரும்பா லானவற்றில் இன்று சிலுவையைப் பார்க்க முடியும்.) இவர்களுடைய வாதம் தவறானது. சீர்திருத்த விசுவாசிகளோ, கர்த்தர் எதை எதை செய்யக்கூடாது என்று ஒரு பட்டியல் போட்டு நமக்குத் தரவில்லை தான். அப்படிப் பட்டியல் போட்டுத் தந்திருந்தால் வேதப்புத்தகம் நாம் தூக்கிச் செல்லமுடியாதபடி மிகப் பெரிதாக இருந்திருக்கும். அதை எல்லோராலும் வாசித்திருக்கவும் முடியாது. ஆகவே, கர்த்தர் நமக்கு எளிமையான ஒரு ஆராதனைத் த்துவத்தைத் தநத்திருக்கிறார். அத்தத்துவத்தின் மூலம் கர்த்தர் கட்டளையிட்டுக் கொடுத்தவை மட்டுமே ஆராதனைக் குப் போதுமானவை என்றும் அவ்வாறு கொடுக்கப் படாதவற்றை ஆராதனையில் சேர்க்கக் கூடாது என்றும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

நாம் தந்துள்ள வரைபடத்தைப் பார்த்தால் இன்று அநேக சபைகள், கல்வினிச ஐங்கோட்பாடுகளைப் பின்பற்றுகிறோம் என்று சொல்கிற சபைகள்கூட ஆராதனையைக்குறித்த சீர்திருத்தப்போதனையைப் பின்பற்றுவதில்லை. சங்கீதம், கீர்த்தனைகள், ஞானப்பாடல்களால் துதித்து ஆராதியுங்கள் என்று தான் வேதம் சொல்கிறது. ஆனால், எப்படி எப்படி யெல்லாமோ வாழும், பேர் ஊர்தெரியாத மனிதர் களின் பாடல்களையும், பாடுவதற்கே சகிக்காத சிறு சிறு “கோரஸ்” களையும் இன்று சபைகளில் பாடிக் கொண்டிருக்கிறார்கள், பேர்க்மன்ஸ், தினகரன் போன்றோரின் பாடல்களை ஆராதனையில் சேர்த்துப் பாடுவது பெருந்தவறு. ஆராதனையில் பாடப்படும் கீர்த்தனை களுக்கும், பாடல்களுக்கும் ஒரு தகுதி இருக்க வேண்டும். தகுதியற்ற மனிதர்களில் வார்த்தை ஜாலங்களையெல்லாம் பாடல்கள் என்ற பெயரில் ஆராதனையில் பாட முயற்சிக்கக்கூடாது. வேதத்தில் காணப்படும் சங்கீதப்பாடல்களுக்கு சரியான மெட்டு அமைத்து அவற்றைப்பாடுவது இதைவிட மேலானது. இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், கர்த்தர் ஆவியாய் இருக்கிறார். அவர் ஆவியினாலும், சத்தியத்தினாலும் ஆராதனை செய்யப்படவேண்டு மென்பதற்காகத்தான்.

சீர்திருத்த விசுவாசி இப்படியெல்லாம் ஆராதனை யைக்குறித்து சிந்திப்பதற்குக் காரணம் கர்த்தருக்கு முன்பு அவன் தான்ஒரு பாவி என்று அறிந்திருப்ப தால்தான். வேதத்தை குறைந்தளவே அறிந்திருக்கிறோம் என்ற அறிவாலும், கர்த்தர் மிகப் பெரியவர் என்று அவன் நம்புவதாலும்தான் சொந்தமாகப் பாடல்கள் இயற்றி அவரைப் பாட வேண்டும் என்ற உந்துதல் களை அடக்கிக் கொள்வான். அவன் ஞானசம் பந்தரைப் போலவோ, திருநாவுக்கரசரைப்போலவோ தேவார மியற்ற முயலமாட்டான். அது இந்து மதத் திற்கு வேண்டுமானால் பொருந்தி வரும் என்பதும், ஆனால் நமக்கு ஆகாது என்பதும் அவனுக்குத் தெரியும். ஆராதனைக்கீதங்களுக்கு ஒரு தகுதி இருக்கிறது என்றும் ஆராதனையைத் தான் நினைத்த படி நடத்தக்கூடாது என்பதையும் அவன் தாழ்மை யுடன் ஏற்றுக் கொள்கிறான்.

சீர்திருத்த விசுவாசிகள் தங்கள் சபை ஆராதனை எளிமையாக, சீர்திருத்த சபைகள் அல்லாத சபைகளில் காணப்படும் கவர்ச்சியும், அலங்காரமும் இல்லாம லிருக்கிறது என்பதற்காக பெருமைப்பட வேண்டும். ஏனெனில், சீர்திருத்த சபை ஆராதனை கர்த்தர் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆராதனையாக தமது ஆராதனை இருக்க வேண்டுமென்பதில் அதிக அக்கறையாக இருக்கிறார்கள். மனிதனைத் திருப்பிப் படுத்த வேண்டும், அவளை சந்தோசப்பட் வைக்க வேண்டும், அவனுடைய உணரச்சியைத் தூண்ட வேண்டும் என்பதற்காக அச்சபைகளின் ஆராதனை கள் அமைவதில்லை. ஆராதனையின்போது நமது இருதயம் சுத்தமாக இருப்பதோடு நாம் செய்யும் காரியங்களும், வழங்கும் ஆராதனையும் வேதபூர்வமாக இருக்க வேண்டுமென்று சீர்திருத்த கிறிஸ்தவர்கள் பாடுபடு கிறார்கள்.

மெய்யான ஆராதனையினால் ஏற்படும் பயன்கள் யாவை? இரண்டாம் கட்டளைக்கு விளக்கம் கொடுக்கும் ஜீ. ஐ. வில்லியம்சன், “இந்தக்கட்டளை யிலேயே கர்த்தர் குழந்தைகளைப்பற்றிப் பேசுகிறார்” என்கிறார். அவர் தொடர்ந்து, “இந்தக்கட்டளையை நாம் மீறும்போது குழந்தைகளே அதிகம் பாதிக்கப் படுகின்றனர்” என்கிறார். இது எப்படி என்று பார்ப்போம். நாம் ஆராதனைக்குள் கர்த்தருடைய வார்த்தைக்கு எதிரான அநேக காரியங்களைத்

(19ம் பக்கம் பார்க்க)

# ஆதித் திருச்சபை

*திருச்சபை வரலாறு பற்றி எழுத வேண்டுமென்று அநேகர் பல வருடங்களாகவே கேட்டு வந்துள்ளனர். தமிழில் முறையாக எழுதப்பட்ட திருச்சபை வரலாற்று நூல்கள் இல்லை. இருப்பவையும் ரோமன் கத்தோலிக்க மதத்தின் அடிப்படையில் எழுதப்பட்டு சீர்திருத்த காலத்தை வேண்டத்தகாததாகவே படம்பிடித்துக் காட்டுகின்றன. இந்தியாவில் இருந்து ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள சபை சரித்திர நூல்களும் இதே வகையில்தான் எழுதப்பட்டுள்ளன. சமீபத்தில் செராம்பூர் கல்லூரி நிறுவாகத்தினரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்திய திருச்சபை சரித்திர நூல் ஒன்றை நான் பெற்று வாசிக்க முடிந்தது. இதில் ரோமன் கத்தோலிக்க சபை கிறிஸ்தவ சபையாகவே வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சீர்திருத்த விசுவாசத்தின் அரும் பெருமைகளையும், அதன் அவசியத்தையும் வாசகர்கள் புரிந்து கொள்ள திருச்சபை வரலாறு அவசியம் என்பதனாலும், சீர்திருத்த, சுவிஷேச இயக்கத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட திருச்சபை வரலாற்று நூல் ஒன்று தமிழில் இல்லாத குறையைத் தீர்ப்பதற்காகவும் இப்பக்கங்களில் தொடர்ந்து திருச்சபை வரலாறு பற்றி எழுதத் தீர்மானித்துள்ளேன். சீர்திருத்தப் போதனைகள் வளர இதைக் கர்த்தர் பயன்படுத்துவாராக! - ஆசிரியர்*

திருச்சபை வரலாறு பற்றி எழுதும்போது எங்கிருந்து ஆரம்பிப்பது என்ற கேள்வி தோன்றும். சிலர் பழைய ஏற்பாட்டில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பார்கள். சிலர் அதை அப்போஸ்தல நடபடிகளில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பர். பழைய ஏற்பாட்டில் சபை இல்லை என்ற வாதம் தவறானது; இது டிஸ்பென்ஷேசனலிசத்தினால் உருவாக்கப்பட்ட போதனை. அப்போஸ்தலர் 13:8 வனாந்தரத்தில் ஒரு சபை இருந்ததாகப் போதிக்கிறது. பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் கிறிஸ்துவின் திருச்சபை அங்கத்தவர்களே. ஆகவே, பழைய ஏற்பாட்டில் சபையையே பார்க்க முடியாது என்று போதிப்பது தவறு. சபை அங்கத்தவராக இருக்க விசுவாசம் மட்டுமே தேவைப்படுமானால் அவ்விசுவாசத்தைப் பெற்றிருந்த பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் நிச்சயம் திருச்சபை அங்கத்தவர்களே. ஆனால், இன்னொரு விதத்தில் புதிய ஏற்பாட்டில் திருச்சபை உருவானது என்ற கூற்றும் பொருந்தும். ஏனெனில், திருச்சபை புதிய ஏற்பாட்டில் காணப்படும்விதத்தில் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் திருச்சபை புதிய உடன்படிக்கையின் சபையாக ஒரு அமைப்பாக யூத மதத்தில் இருந்தும், புறஜாதியார் மத்தியில் இருந்தும் வரும் மக்களைக் கொண்டு விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்த சபையாகக் காட்சி அளிக்கிறது. இதனால்தான், இயேசுவும் மத்தேயு 16:18 இல் “நான் என் சபையைக் கட்டுவேன்” (“I will build My church” - future tense) என்று எதிர்காலத்தில் பேசியுள்ளார். பழைய ஏற்பாட்டில் சபை நிச்சயமாக இருந்தபோதும், புதிய ஏற்பாட்டில் அது முன்பிருந்திராத வகையில் ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக மரித்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவைத் தலைக்கல்லாகக் கொண்டு எழுந்தது.

கிறிஸ்துவின் திருச்சபை அப்போஸ்தலர் காலத்தில் எவ்வாறு அமைக்கப்பட்டு வளர்ந்தது என்ற வரலாற்றை விவரித்துக் கூறுகிறது அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம். திருச்சபை அமைக்கப்பட்டு எவ்வாறு வளர்ந்தது என்பதிலிருந்து பவுல் ரோமில் சிறைவைக்கப்பட்டு ரோமப் பேரரசனின் முன் கொண்டுவரப்படுவதற்காகக் காத்திருந்த காலம்வரை, **கி.பி 30-64** வரையுள்ள காலப்பகுதியின் நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது இப்புத்தகம்.

பரிசுத்த ஆவி வந்திறங்கியபின் பேதுருவின் பிரசங்கத்தைக் பெந்தகோஸ்தே நாளில் கேட்டு 3000 பேர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். அவர்கள் ஏற்கனவே இருந்த 120 பேருடன் இணைக்கப்பட்டு புதிய ஏற்பாட்டு சபை உருவானது. அதன்பிறகு அது வெகு வேகமாக வளர்ந்தது. கிறிஸ்தவர்களை அழிக்கப் புறப்பட்ட சவுல் தமாஸ்கு வீதியில் கிறிஸ்துவின் அழைப்பைப் பெற்று புறஜாதியார்களுக்கான அப்போஸ்தலனாக யெருசெலேம் சபையோடு சேர்ந்து பணிபுரியத் தொடங்கினார். பின்பு அந்தியோகியா சபையால் பர்னபாவுடன் சபை அமைக்கும் ஊழியத்திற்காக ஜெபத்துடன் அனுப்பி வைக்கப்பட்டார். பவுலோடு சீலாவும், தீமோத்தேயுவும், லூக்காவும் இத்தகைய சபை அமைப்புப் பணிக்காக பல இடங்களுக்கும் ஆசியா, ஐரோப்பாவுக்கும் சென்றனர். பல இடங்களிலும் திருச்சபைகள் அமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் அவை நேரடியாக அப்போஸ்தலரின் மேற்பார்வையில் இருந்தன.

இக்காலப்பகுதியில் ரோமர்களின் ஆட்சியில் உலகின் பெரும்பகுதி இருந்தது. அவர்களுடைய ஆட்சியில் கிரேக்கமொழி எல்லா இடங்களிலும பரவி மக்களால் பேசப்பட்டு வந்ததும், துரிதப் பிரயாணத்திற்கு வசதியாக நல்ல பாதைகள் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட்டிருந்ததும் சுவிஷேசம் எல்லாப்பகுதிகளிலும் பிரசங்கிக்கப்படுவதற்கு வசதியாக அமைந்தது. பொதுவாக ரோமர் சுவிஷேச ஊழியத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அவர்களைவிட யூதர்களே கிறிஸ்தவத்திற்குப் பேரெதிரிகளாக இருந்தனர். அப்போஸ்தல நிருபங்கள் எழுதப்பட்ட காலங்களில் யூதர்களே கிறிஸ்தவ சுவிஷேசத்தைத் தடைசெய்யவும் அபபோஸ்தலர்களைத் தாக்கவும் பெருமுயற்தி எடுத்ததை அப்போஸ்தல நடபடிகள் விளக்குகின்றது. இக்காலங்களில் ரோமர் கிறிஸ்தவர்களுக்குப் பெருந்துன்பம் அளிக்கவில்லை. பவுலின் ஊழியத்தின் காரணமாக ரோமப்படை வீரர்களில் சிலரும் கிறிஸ்துவை அறிந்து விசுவாசிகளாக இருந்திருப்பதை வேதம் எடுத்துக் காட்டுகின்றது.

ஆனால், ரோமப் பேரரசனனான நீரோவின் ***(கி.பி 54-68)*** காலத்தில் நிலைமை முற்றாக மாறியது. நீரோ மிகவும் மோசமானதொரு கொடுமைக்காரனாக இருந்தான். ரோம் எறிந்து கொண்டிருந்தபோது அவன்

பிடில் (Fiddle) வாசித்து தன்னை மகிழ்வித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் கதையே அவன் எத்தகைய மனிதன் என்பதை விளக்குகிறது. **கி.பி 64** இல் ரோமில் பெருந்தீ ஏற்பட்டது. இதனை நீரோவே ஆரம்பித்த தாகவும் கூறப்படுகின்றது. ஆனால், இப்பழியை நீரோ கிறிஸ்தவர்கள் மேல் போட்டான். கிறிஸ்தவர்களுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இருக்கவில்லை. கிறிஸ்த வர்களை நிரோ இக்காலத்தில் மிகக் கொடூரமாக நடத்தியதை வரலாற்றாசிரியர்கள் எழுதி வைத்துள்ளனர். கிறிஸ்தவர்களை மிருகத் தோலினால் சுற்றிக் கொடிய வனவிலங்குகள் அவர்களைக் கொன்று தின்னும்படி அவைகள் முன்னால் தூக்கி எறியும்படிச் செய்தான். தன்னுடைய தோட்டத்தில் இரவு நேர விருந்துப சாரங்களின்போது கிறிஸ்தவர்களைக் கம்பத்தில் உயிரோடு கட்டி எண்ணை ஊற்றி எரித்து விளக்குக் கம்பங்களாகப் பயன்படுத்தினான் நீரோ. மிகக் குரூரமாக கிறிஸ்தவர்களை நடத்தியவன் நீரோ.

இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ரோம எழுத்தாளரான சூடோனிஸ், கிறிஸ்தவர்கள் விஷமத்தனமான மூட நம்பிக்கைகளைப்பின்பற்றும் ஒரு கூட்டம் என்று எழுதி வைத்தார். ஆனால், அம்மூட நம்பிக்கைகள் என்ன என்பதை அவர் எங்கும் விளக்கவில்லை. பிளினி என்பவர் டிராஜான் என்ற ரோமப் பேரரசனுக்கு **112** ம் ஆண்டில் எழுதிய கடிதங்கள் அக்காலத்துக் கிறிஸ்தவர்களைப்பற்றி நாம் மேலும் அறிந்து கொள்ள உதவுகிறது. பித்தினியாவில் கவர்னராக இருந்த பிளினி கிறிஸ்தவர்களை எப்படி நடத்துவது என்று தெரியாமல் விழித்தார். டிராஜானுக்கு அவர் எழுதிய கடிதமொன்றில், "நான் கிறிஸ்தவர்ளைப் பார்த்து மூன்று முறை நீங்கள் கிறிஸ்தவர்கள்தானா? என்று கேட்பேன். அவர்கள் மூன்று முறையும் ஆம் என்று பதில் சொன்னால் அவர்களுக்கு உடனடியாக மரண தண்டனை விதிப்பேன். விடாப்பிடியாக அசைய மறுப்பவர் களைத் தண்டிப்பது அவசியம். கிறிஸ்தவர்களில் ரோமப் பிரஜாவுரிமை கொண்டவர்களை ரோமுக்கு அனுப்பிவிடுகிறேன். கிறிஸ்துவை மறுதலிப்பவர்களை உடனடியாக விடுதலை செய்துவிடுகிறேன். ஆனால், உண்மையான கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை ஒருபோதும் மறுதலிக்க மாட்டார்கள் என்று சொல்லப்படுகிறது" என்று பிளினி எழுதியிருக்கிறார்.

இரண்டாம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்களுடைய தொகை அதிகம் வளர்ந்தது என்று நம்பக்கூடியதாக இருக்கின்றது. 150 ல் ஒரு கிறிஸ்தவர் ரோமப் பேரரசனுக்கு பின்வருமாறு எழுதக்கூடியதாக இருந்தது: உங்களுடைய ஆலயங்களைத்தவிர மற்ற எல்லா இடங்களையுமே நாம் நிரப்பி விட்டோம். நகரங்கள், கோட்டைகள், அரண்மனைகள், செனட் மண்டபம் எல்லா இடங்களிலும் நம்மவர்கள் இருக்கிறார்கள். கிறிஸ்தவம் இவ்விதமாக வளர்ந்தது.

அப்போஸ்தலர்களில் பலர் கிறிஸ்தவத்திற்காக தம் உயிரைப் பணயம் செய்ய வேண்டி வந்தது. ஏற்கனவே பவுலும், சைலஸும், பேதுருவும் எதிரிகளால் தாக்கப்பட்டும், சிறை அனுபவங்களை யும் அடைந்திருந்தார்கள். ஸ்தேவான் யூதர்களால் கொலை செய்யப்பட்டான். அப்போஸ்தலனான யாக்கோபு சிரச்சேதம் செய்யப்பட்டான் **(கி.பி 63).** பேதுருவும், அதன்பின் பவுலும் கொல்லப்பட்டனர். இவர்களுடைய உயிர்த்தியாகத்தின் மத்தியில் கிறிஸ்து வின் சுவிஷேசமும், கிறிஸ்தவ சபையும் எல்லா எதிர்ப்புகளையும், தடைகளையும் தாண்டித் தொடர்ந்து வளர்ந்தது.

அப்போஸ்தலர்கள் அமைத்த ஆதி சபை பற்றி நாம் இங்கு அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். அச்சபை களை அமைத்த அப்போஸ்தலர்கள் சில முக்கியமான கோட்பாடுகளைக் கடைப்பிடித்தனர்.

1) தெளிவான சுவிஷேசத்தை அவர்கள் ஆவியின் வல்லமையோடு பிரசங்கித்தனர் (அப்போஸ். 2, 3). மனந்திரும்புதலும், கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசமும் மட்டுமே விசுவாசிகளிடம் எதிர்பார்க்கப்பட்டது. அதை ஆவியானவர் மட்டுமே பாவிகளில் செய்யக் கூடிவராக இருக்கிறார் என்று அவர்கள் நம்பினர். அர்ப்பண அழைப்பு போன்ற, கிறிஸ்துவிடம் ஆத்துமாக்களை வரவழைக்கும் போலிச்சடங்குகள் அங்கு காணப்படவில்லை. ஆத்துமாக்களைத் தீர்மானம் எடுக்க வைக்கும் கேடான வழியை அப்போஸ்தலர்கள் ஏற்படுத்தவில்லை.

2) விசுவாசிகள் மட்டுமே ஞானஸ்நானம் பெற்றுத் திருச்சபையில் அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (அப்போஸ். 2:40-42). குழந்தை ஞானஸ்நானத்தை சபை அன்று அறிந்திருக்கவில்லை. விசுவாசிகள் தங்களை அப்போஸ்தலரின் போதனை களுக்கும், ஜெபத்திற்கும், அப்பம் பிட்குதலுக்கும், ஐக்கியத்திற்கும் ஒப்புக் கொடுத்தனர். இவற்றைச் செய்ய எந்தக் கிறிஸ்தவர்களும் மறுக்கவில்லை. விசுவாசமில்லாதவர்களும், இவற்றிற்குத் தம்மை ஒப்புக்கொடுக்க மறுப்பவர்களும் திருச்சபையில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

3) திருச்சபைகள் அனைத்தும் மூப்பர்களையும், உதவியாளர்களையும் கொண்டிருந்தன (1 தீமோத். 3:1-15; தீத்து 1:5-9; 1:5; எபிரே. 13:7, 17). மூப்பர்களே சபையை ஆண்டனர். உதவியாளர்கள் மூப்பர்களுடன் சேர்ந்து அவர்களின் கீழ் இருந்து சபை நிர்வாகங் களைக் கவனித்துக் கொண்டனர். இவர்களைத் தவிர வேறு எந்த சபை அதிகாரிகளையும் புதிய ஏற்பாடு சபை கொண்டிருக்கவில்லை. இன்று காணப்படும் ஆர்ச்பிசப், பிசப், விக்கார் போன்ற பட்டங்களும், பதவிகளும் அப்போஸ்தலர்கள் காலத்தில் இருக்க வில்லை. இவை கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட பதவிகளுமல்ல. அப்போஸ்தலர்கள் எதிர்காலத்தில் உலகில் இருக்கும் அனைத்து சபைகளும் பின்பற்றும் படி இருவிதமான சபைப் பொறுப்புகளை மட்டுமே, அதாவது மூப்பர்களையும், உதவியாளர்களையும் மட்டுமே ஏற்படுத்தினர்.

4) திருச்சபை ஆராதனை யூத Synagogue ஐப்பின் பற்றி அமைந்திருந்தது. அங்கு வேதவாசிப்பும், சங்கீதம், கீர்த்தனைகள், ஞானப்பாடல்கள் பாடுதலும், பிரசங்கமும், திருவிருந்தெடுத்தலும், திருமுழுக்குக் கொடுத்தலும், காணிக்கை எடுத்தலும் மட்டுமே காணப்பட்டது. ஆராதனை மிக எளிமையானதாக, கர்த்தர் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமைந்திருந்தது. இன்று ஆராதனை என்ற பெயரில் திருச்சபைகளில் நடக்கும் கூத்துக்களுக்கு அப்போஸ்தல சபைகளில் இடமிருக்கவில்லை. ஆத்துமாக்களுக்குப் பிடித்த அம்சங்கள் ஆராதனையை அலங்கரிக்கவில்லை. கர்த்தருடைய வழி முறைகளுக்கும் போதனைகளுக்கு மட்டுமே அங்கு இடமளிக்கப்பட்டது.

(வளரும்)



# வில்லியம் கேரி

*1814 ம் 1825ம் செராம்பூர் மிஷனரிகளுக்கு பெருந் துக்கத்தைக் கொண்டு வந்தன. முதலில் சட்கிளிப்பும் அதற்குப்பிறகு புளரும் மறைந்த செய்தி அவர்கள் காதை எட்டியது. கேரி இதனால் மிகவும் கவலை கொண்டார். அவர் புளரைப் பற்றிக் கூறும்போது, நான் அவரை நேசித்தேன். என்னுடைய இதயத்தில் உள்ளதையெல்லாம் பகிர்ந்து கொள்ள இங்கிலாந்தில் அவரைப் போல ஒரு மனிதன் கிடையாதே என்று கூறிப் பெரிதும் வருந்தினார். கேரியே புளரின் மறைவால் அதிகத்துன்பப்பட்ட மனிதனாக இருந்தார். கேரி செய்த அருட்பணிகளுக்குத் துணைபோக உயிரைக் கொடுத்துழைத்த வேறு மனிதன் இருக்க முடியாது. புளரின் இழப்பால் கேரிக்கு ஏற்பட்ட நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல.*

இத்துன்பம் போதாதென்று செராம்பூருக்கு புதிதாக அனுப்பப்பட்டவர்களால் பல தொல்லைகள் ஏற்பட்டது. மார்ச்மனுக்கு எதிராக அவர்கள் குரலெழுப்பினர். மிஷனுக்குள் அதிக பொறாமையும், எரிச்சலும் காணப்பட்டது. கேரிக்கு இதெல்லாம் பெரும் வருத்தத்தைக் கொடுத்தது. அதனால் அவர் நோய் வாய்ப்பட்டார். இதை மேலும் அதிகரிப்பது போல், இங்கிலாந்து கமிட்டி ஜாவா, இலங்கை ஆகிய இடங்களில் இருந்த ஊழியங்களை மூட வேண்டும் என்று யோசனை தெரிவித்தது. கேரி மிகவும் வருத்தத்துடன் அவர்களுக்கு பதில் எழுதினார். “கடைக் கணக்குவைப்பதுபோல் தற்போதுள்ள வருமானத்திற்கேற்ப மிஷன் ஸ்டேசன்களைக் குறைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடாது உங்களுடைய வருமானத்தை அதிகரிக்கும் வழியைப் பார்த்து நமக்குக்கிடைத்திருக்கும் அநேக சந்தர்ப்பங்களைப்பயன்பற்றி ஊழியத்தை நடத்தப்பாருங்கள். நமது நோக்கங்கள், திட்டங்கள் பெரிதாக இருக்குமானால் நிச்சயம் ஆத்துமாக்கள் அவற்றை நிறைவேற்றத் தேவையான பணத்தைக் கொடுப்பார்கள்.” என்று கேரி எழுதினார். இதையெல்லாம்விடவும் மோசமான ஒரு செய்தியும் அவர்களை எட்டியது. கேரியும், வார்டும், மார்ச்மனும் ஊழியத்தைப்பயன்படுத்தி அதிக சொத்து சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் அச்செய்தி.

புளரும், சட்கிளிப்பும், ரைலண்டும் இங்கிலாந்தில் மிஷனரி சொசைட்டியில் இருந்தபோது இத்தகைய எண்ணங்களுக்கு இடமிருக்கவில்லை. செராம்பூர் மூவரையும் பற்றி அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. கேரியும் அவரைச் சார்ந்தவர்களும் ஊழியத்தை வைத்துப் பணம் சேர்க்கும் பிணந்தின்னிக் கழுகுகள் இல்லை என்பது அவர்கள் அறிந்த உண்மை. ஆனால், இப்போது புளரும், சட்கிளிப்பும் மறைந்த பின்னர் வேறு மனிதர்கள் சொசைட்டியில் அங்கம்வகித்ததால் பெரும் பிரச்சனைகள் ஏற்படத் தொடங்கின. இது போதாதென்று பர்மாவில் ஊழியம் செய்து கொண்டிருந்த கேரியின் மகன் பீளிக்ஸ் கப்பலில் போய்க் கொண்டிருந்தபோது அவரது மனைவியும், மகனும் எல்லா உடமைகளும் கப்பல் கவிழ்ந்ததால் தண்ணீரோடு போய்விட்ட செய்தி கேரியை எட்டியது. பீலிக்ஸ் அரும்பாடுபட்டு பர்மீய மொழியில் மொழி பெயர்த்திருந்த மத்தேயு சுவிஷேசமும் தண்ணீரோடு போய்விட்டது. இதையறிந்த கேரி யோபுவைப் போலத் துன்பத்தில் ஆழ்ந்தார். அதேவேளை, யோபுவைப் போல அவர் வாயையும் திறக்கவில்லை.

இதற்குப்பின் பீலிக்ஸூம் விசுவாச வாழ்க்கையில் பின்வாங்கி சிறிது காலம் நாடோடிபோல் வாழ்ந்து திரிந்தார். கேரியுடன் அவர் தொடர்பு வைத்திருந்து கேரியின் கடிதங்களால் ஆறுதல் அடைந்தார். இரு வருடங்களுக்குப்பிறகு சிட்டகொங்கில் வார்ட்டை பீலிக்ஸ் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. வார்ட்டின் அறிவுறைகளால் பீலிக்ஸ் மறுபடியும் செராம்பூர் வரும் வாய்ப்பு ஏற்பட்டது. கேரிக்கு அச்செய்தி எத்தகைய சந்தோஷத்தை அளித்திருக்கும்.

இங்கிலாந்தில் சொசைட்டியில் இருந்த ஜோன்ஸ் என்ற உறுப்பினரால் செராம்பூர் மிஷனரிகள் மத்தியில் சந்தேகங்கள் எழுந்து பிரிவினை ஏற்பட்டது. இங்கிலாந்தில் இருந்து வந்து மூன்று வருடங்கள் மட்டுமே ஊழியம் செய்திருந்த மூன்று இளைஞர்கள் தனியாக மிஷன் அமைக்கப்புறப்பட்டனர். அவர்கள் மிகத் திறமைசாலிகளாக இருந்தனர். கேரி தலையிட்டுப் பேசி அவர்களுடைய நட்பைப்பெற்றதால் இது தவிர்க்கப்பட்டது. ஜோன்ஸினுடைய திருவிளையாடல்களால் இது ஏற்பட்டதென்பதையும் அறிந்துகொள்ள முடிந்தது.

திருச்சபை ஊழியத்தில் துன்பங்களே அடையாது சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் மட்டும் வாழ வேண்டும் என்று மட்டும் எண்ணும் போதகர்களும், போதக ஊழியத்திற்காத் தம்மைத் தயார் செய்து கொள்பவர்களும் செராம்பூர் மிஷனரிகளைக்குறிதது சிந்தித்துப் பார்க்க வேண்டும். கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும்கூட இத்தகைய நெருக்கடிகளைத் தங்கள் வாழ்வில் சந்திக்க வேண்டியிருந்தது. பிறரின் சந்தேகத்திற்குள்ளாகியும், தனிப்பட்ட வாழ்க்கையில் பல துன்பங்களை சந்தித்தும், எதிர்பாராத தடைகளை எதிர்நோக்கியும் வாழ்வது தேவ ஊழியர்கள் தங்கள் வாழ்க்கையில் சாதாரணமாக சந்திக்கும் காரியங்கள்தான். இதையெல்லாம் தாங்க முடியாது என்போருக்கு சபை ஊழியம் ஒத்துவராது. ஊழியத்தைவைத்துத் தங்களை உயர்த்திக் கொள்ளும் பச்சோந்திகள் பரவலாகக் காணப்படும் இக்காலங்களில் ஊழியத்தில் துன்பத்திற்கே இடமில்லை என்ற போலித்தனமான எண்ணம் ஏற்படத்தான் செய்யும். இத்தகைய எண்ணங்களுக்கு வாழ்க்கையில் இடம் கொடுக்காது கேரி போல் வருந்துன்பங்களையெல்லாம் வரவேற்று, கர்த்தரை மட்டுமே நம்பி ஊழியம் செய்யும் போதகர்களாக நாமிருக்க வேண்டும்.

# 1 கொரி. 12-14
## (ஆவிக்குரிய வரங்கள் பற்றிய விளக்கம்)

ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய போதனைகளை அளிக்கத்துவங்கியபோது பன்னிரெண்டாம் அதிகாரத்தில் கிறிஸ்துவின் சபையைப்பற்றித் தெளிவான விளக்கத்தை அளித்து, கிறிஸ்து அநேக வரங்களைத் தந்தபோதும் அவ்வரங்களில் மேலான வரங்களும் உண்டு என்று கூறி அவ்வரம் யாது என்று இனி விளக்குவேன் என்று முடித்தார் பவுல். பதின்மூன்றாம் அதிகாரத்தில் அன்பே அம்மேலான வரம் என்று கூறி அன்பின் மகத்துவத்தை விளக்கினார். அவ்வதிகாரத்தின் இறுதிப்பகுதியில் வெளிப்படுத்தலோடு தொடர்புடைய வரங்கள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்ததை நிறைவானது வரும்போது குறைவானது இல்லாமல் போகும் என்று கூறியதன் மூலம் விளக்கினார். நிறைவானது என்பது எழுதி முடிக்கப்பட்ட வேதமே என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி இனி அடையாள, அற்புதங்களையோ, அந்நிய பாஷையையோ தீர்க்கதரிசனங்களையோ நாம் நாட வேண்டிய அவசியமில்லை, கர்த்தரின் சித்தத்தை முழுமையாக வெளிப்படுத்தும் வேதத்தைப் படித்தால் போதும் என்று விளக்கினார் பவுல். பதின் மூன்றாம் அதிகாரம் அன்பே எக்காலத்திலும் இருக்கக்கூடியது; அதுவே அனைத்திலும் பெரியது என்று விளக்கி முடிந்தது.

இனி பதின்நான்காம் அதிகாரத்தை நாம் பார்க்க வேண்டும். இவ்வதிகாரம் ஒரு நீளமான அதிகாரம். இவ்வதிகாரத்துடன் ஆவிக்குரிய வரங்கள் பற்றிய போதனைகள் ஒரு முடிவுக்கு வருகின்றன. இந்த இறுதி அதிகாரம் பல முக்கிய போதனைகளை அள்ளித் தருகின்றது.

இவ்வதிகாரத்தில் பவுல் தொடர்ந்து ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய போதனைகளுடன் ஆரம்பிக்கிறார். ஆனால், அவற்றில் இரண்டைப்பற்றி மட்டுமே பவுல் விஷேடமாகப் பேசுவதைப்பார்க்கிறோம். அந்நிய பாஷையைப் பற்றியும் தீர்க்கதரிசனத்தைப் பற்றியும் மட்டுமே இங்கே பவுல் விளக்கமளிக்கிறார். வேறு வரங்களைப்பற்றி எதுவுமே கூறவில்லை. அற்புதங்கள். அடையாளங்களைப் பெரிதுபடுத்திப் பேசுபவர்கள் இங்கு பவுல் அவற்றிற்கு எந்த முக்கியத்தவமும் கொடுக்கவில்லை என்பதை கவனிக்க வேண்டும்.

அந்நியபாஷைக்கும், தீர்க்கதரிசனத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து அவற்றைப்பற்றி மட்டும் பவுல் எழுதியதற்குக் காரணம், அவை இரண்டை மட்டுமே கொரிந்தியர்கள் பெரிதுபடுத்தியதால்தான். ஆகவே, அவை இரண்டையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பவுல் இங்கு விளக்குகிறார். அதுவும் அந்நிய பாஷையைவிட தீர்க்கதரிசனமே மேலானது என்று கூறுகிறார். அதற்கான காரணங்களையும் தர ஆரம்பித்து திருச்சபை ஆராதனையின்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை விளக்கி அங்கு ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தும்விதத்தையும் தெளிவாகப் போதிக்கிறார்.

அந்நியபாஷையையும் தீர்க்கதரிசனத்தையும் ஒப்பிடும் பவுல் முதலாவதாக அந்நியபாஷை பேசுகிறவன் வேறு மொழியில் பேசுகிறான் என்று கூறுகிறார். ஆனால், தீர்க்கதரிசனமோ எல்லோருக்கும் புரியக்கூடிய மொழியிலேயே பேசப்படுகின்றது. ஆகவே, தீர்க்கதரிசனம் மேலானது என்பது பவுலின் போதனை. கொரிந்தியர்கள் அந்நியபாஷையை அதிகம் நாடியதன் காரணம் அது வேறுமொழியில் இருந்ததால்தான்.

### தீர்க்கதரிசனம்

தீர்க்கதரிசனம் என்பது கர்த்தர் வெளிப்படுத்தும் சத்தியத்தை பிறருக்கு விளக்குவதாகும். இது எதிர்காலத்தில் நிகழப்போவதை விளக்குவதாகவும் அமையலாம் அல்லது கர்த்தர் வெளிப்படுத்தும் சத்தியமாகவும் அமையலாம். எதிர்காலத்தில் நடக்கப்போவதைத் தெரிவிப்பது மட்டுமே தீர்க்கதரிசனம் என்று நினைக்கக் கூடாது. தீர்க்தரிசனம் எப்போதுமே வழுவாதது. அது கர்த்தரின் வாக்காததால் அதில் தவறுக்கு இடமிருக்க முடியாது. தீர்க்கதரிசனம் சொல்பவர்களின் வாக்கு தவறாக இருந்தால் பழைய ஏற்பாட்டில் அவர்களைக் கல்லால் அடித்துக் கொல்லும் வழக்கமிருந்தது (உபாகமம் 18:20-22). புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் சொல்லும்வரம் தீர்க்கதரிசிகள் அல்லாதவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆண்களும், பெண்களும் இதைப் பெற்றிருந்தனர். கர்த்தர் வெளிப்படுத்திய சத்தியம் இவர்கள் மூலம் சபைக்கு வெளிப்படுத்தப் பட்டது.

### அந்நிய பாஷை

அந்நிய பாஷை என்பது நமக்கு ஏற்கனவே தெரிந்திராத ஒரு மொழியில் கர்த்தரின் சத்தியத்தை அறிவிப்பதாகும். அப்போஸ்தலர்கள் நடபடிகள் 2 ம் அதிகாரம் பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவின் சீடர்கள் வேற்று மொழிகளில் பேசினார்கள் என்று வாசிக்கிறோம். ஆகவேதான் வேற்று நாடுகளில் இருந்துவந்து அன்று அங்கு கூடியிருந்த மக்கள் இவர்களால் எப்படித் தங்களுடைய மொழியில்பேச முடிந்தது என்று ஆச்சரியப்பட்டார்கள். இதிலிருந்து இப்பகுதியில் அந்நியபாஷை என்பது ஒருவருமே புரிந்து கொள்ள முடியாத வெறும் சத்தமல்ல அது ஒரு மொழி என்பது தெரிகிறது. அப்போஸ்தலர் நடபடிகளிலும், 1 கொரிந்தியர் 14 லும் இதை விளக்குமுகமாகத்தான் அந்நியபாஷை என்பதற்கு கிரேக்க வார்த்தையான glossa என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஆங்கில வேதங்களில் tongues என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதற்கு மொழிகள் என்று பொருள். மொழிகளை tongues என்று சொல்வது வழக்கம். தமிழிலே அந்நியபாஷை அதாவது வேற்று மொழி என்று சரியாகவே மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. ஆகவே, அந்நியபாஷை என்பது மனிதர்கள் புரிந்து கொள்ளக்கூடிய உலகத்தில்

காணப்படும் மொழிகளே தவிர அர்த்தமற்ற வெறும் ஓசை என்று நினைக்கக்கூடாது.

### தீர்க்கதரிசனம் சொல்கிறவன் சபை வளர்ச்சிக்குத் தேவையானதைப் பேசுகிறான் (1-5).

தீர்க்கதரிசனத்தையே அனைவரும் நாட வேண்டும் என்று இதுவரை பவுல் கூறினார். ஆனால், ஏன் தீர்க்கதரிசனத்தை நாட வேண்டும்? ஏனெனில், அந்நிய பாஷையில் பேசுகிறவன் பேசுகிறதை ஒருவரும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனஉஷரிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான் என்று 2ம் வசனத்தில் பவுல் பதிலளிக்கிறார். இதை நான் விளக்குவதற்கு முன் ஒரு உண்மையை வாசகர்கள் கவனிக்க வேண்டும். 1 கொரிந்தியர் 14 முழுவதிலும் “பேச்சு” என்ற வார்த்தை ஒரு மொழியை அர்த்தத் துடன் பேசுவதையே குறிக்கும். அதைக்குறிக்கும் lalayo என்ற கிரேக்க வார்த்தையே இங்கு பயன்படுத்தப்பட் டுள்ளது. ஆகவே. அந்நியபாஷை என்பது மனிதர் பேசும், அவர்களால் புரிந்து கொள்ளக் கூடிய மொழி என்பது தெளிவாகிறது. அது வெறும் அர்த்தமற்ற ஓசையல்ல.

அடுத்ததாக அந்நியபாஷை பேசுகிறவன் தான் பேசுகிறதை அறிந்திருக்கிறான் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. 2ம் வசனத்தில் அவன் “ஆவியினாலே பேசினாலும்” என்று இருக்கிறது. இது பரிசுத்த ஆவியைக்குறிப்பிடாமல் பேசுகிறவனுடைய ஆவியைக்குறிக்கிறது. அதாவது பேசுகிறவன் தான் பேசுவதை அறிந்து, உணர்ந்தே பேசுகிறான் என்பது இதற்குப் பொருள். இந்த இடத்தில் in spirit என்ற வார்த்தை பரிசுத்த ஆவியைக்குறிப்பதல்ல. ஒரு மனிதனுடைய இருதய ஆழத்தைக்குறிக்குமுகமாக இப்பதங்கள் புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன (மத்தேயு 26:41). புதிய ஏற்பாட்டில் ஆவி, ஆன்மா என்ற வார்த்தைகள் மனிதனின் இருதய ஆழத்தைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

அடுத்ததாக இப்பகுதியில் பவுல் அந்நியபாஷை பேசுகிறவன் ஆவியினாலே “இரகசியங்களைப்” பேசுகிறான் என்று கூறுகிறார். இதற்கு ஆங்கிலத்தில் “Mystery” என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இதற்கு நாமே எதாவது ஒரு அர்த்தத்தைக் கொடுத்து விடாமல் புதிய ஏற்பாட்டில் இதற்கு என்ன விளக்கம் என்று பார்க்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் தெளிவாக வெளிப்படுத்தப்படாமல் புதிய ஏற்பாட்டில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டுள்ள சுவிஷே சத்தையே புதிய ஏற்பாடு “இரகசியம்” என்ற வார்த்தையின் மூலம் அடையாளங்காட்டுகிறது. இவ்வகையிலேயே “இரகசியம்” என்ற வார்த்தை வேறு இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது (எபேசியர் 3:2-6; கொலோசேயர் 1:25-27). ஆகவே, அந்நியபாஷை பேசுகிறவன் (பிறருக்குப் புரியாமலிருந்தாலும்) புரிந்து கொள்ளக்கூடிய ஒரு மொழியில் இதுவரை அறிவிக்கப்படாதிருந்த சுவிஷேச உண்மையை தானே நன்றாகப் புரிந்து கொண்டு பேசுகிறான் என்று பவுல் இவ்வசனத்தில் கூறுகிறார். “இரகசியம்” என்ற வார்த்தையை புதிய ஏற்பாடு தரும் இவ்விளக்கத்தின் படியே நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்நிய பாஷை பேசுகிறவன் கர்த்தர் வெளிப்படுத்தியுள்ள சத்தியத்தைத்தான் பேசுகிறான். அதைக் கர்த்தரும் அவனும் நன்றாக அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்நியபாஷை பேசுகிறவனுக்குத் தான் பெசுவது என்னவென்று புரியாமலிருக்கின்றது என்ற பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டத்தாரின் வாதத்திற்கு வேதத்தில் இடமில்லை.

தொடர்ந்து அந்நியபாஷையையும், தீர்க்கதரிசனத்தை யும் ஒப்பிடும் பவுல் 3ம் வசனத்தில் தீர்க்கதரிசனம் சபைக்குப் பக்திவிருத்தியையும், ஆறுதலையும் அளிக்கிறது என்று கூறுகிறார். அதாவது, தீர்க்க தரிசனத்தை அனைவரும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஆனால், அந்நியபாஷை கேட்பவர்கள் புரிந்துகொள்ள முடியாத ஒரு மொழியில் இருக்கும். 4வது வசனத்தில் பவுல் அந்நியபாஷை சொல்கிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுவதாகவும், தீர்க்கதரிசனம் பேசுகிறவனோ சபைக்குப் பக்தி விருத்தி உண்டாகப்பேசுவதாகவும் கூறுகிறார். அந்நியபாஷை எல்லோரும் புரிந்து கொள்ள முடியாத மொழியில் இருப்பதால் சபை அதனால் பக்திவிருத்தி அடைய முடியாது. தீர்க்கதரிசனம் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் இருப்பதால் சபை அதனால் பயனடைய முடியும். புரிய முடியாத எந்த மொழியில் பேசினாலும் சபை மக்கள் பக்திவிருத்தி அடைவதற்கு வழியில்லை.

அந்நியபாஷையை சபையார் புரிந்துகொள்ள வேண்டுமானால் அதற்கு யாராவது அர்த்தம் சொல்ல வேண்டும். அர்த்தம் சொல்ல ஒருவர் இல்லாவிட்டால் பேசுகிறவனைத்தவிர வேறு எவரும் அதனைப் புரிந்து கொள்ள முடியாது. சபையாருக்கும் அதனால் ஒருவித பயனும் இருக்காது. இதைத்தான் 5ம் வசனத்தில் பவுல் விளக்குகிறார்.

இதைப் பவுல் எழுதிய காலத்தில் அந்நியபாஷை தொடர்ந்திருந்தது. அது இன்னும் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. வேதம் முழுவதும் எழுத்தில் முடிக்கப்படவில்லை. அக்காலத்தில் கர்த்தர் தொடர்ந்து தனது சித்தத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். அதனால், அந்நியபாஷையைக் கர்த்தர் அக்காலங்களில் சிலருக்கு அளித்து வந்தார். அதுசபைக்கு அக்காலத்தில் தேவையானதாக இருந்தது. ஆகவே, பவுல் கொரிந்தியர்கள் அந்நியபாஷை பேசுவதைத் தடைசெய்யவில்லை. மாறாக, அவர்கள் சுயநல நோக்கத்திற்காகவும், தற்பெருமைக்காகவும் அதை நாடக்கூடாதென்று வற்புறுத்தி அந்நிய பாஷையைவிட தீர்க்கதரிசனத்தின் மேலான பயன்களை விளக்கி அதை நாடும்படியாக வலியுறுத்துகிறார்.

### அறிவுண்டாகாவிட்டால் பலனில்லை (14:6-19)

தொடர்ந்து அந்நியபாஷையையும், தீர்க்கதரிசனதையும் ஒப்பிடும் பவுல் ஆத்துமாக்களுக்கு அறிவுண்டாக்குவதே வரங்களின் பயனாக இருக்க வேண்டுமென்கிறார். அறிவைத் தராத எதனாலும் எந்தப்பயனும் இல்லை என்பதை பவுல் இங்கு வலியுறுத்துகிறார். இன்று அந்நியபாஷையும், தீர்க்கதரிசனமும் தொடர்ந்திருக்கிற தென்று நம்புபவர்கள் வேதத்தைப்படிக்காமலும், புரிந்து கொள்ளாமலும் அவற்றின் மூலம் பொய்யாக நடக்கப்போகும் காரியங்களை முன்னறிவித்துக் கொண்டிருப்பதைப் பணியாகக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், பவுல் இப்பகுதியில் அவை கர்த்தரின் சித்தத்தை வெளிப்படுத்தி நமக்கு அறிவைக் கொடுப்ப தற்காகத் தரப்பட்டுள்ளன என்கிறார். இதை விளக்கும் பவுல் தீர்க்கதரிசனத்தை நேரடியாகக் கேட்கும்போதே

கேட்பவர்களால் அதைப் புரிந்து கொள்ளமுடிகிறது என்றும், அந்நியபாஷையைப் புரிந்து கொள்வதற்கு அதை விளக்கும்வகையில் அர்த்தம் சொல்லப்பட வேண்டும் என்றும் கூறுகிறார்.

**தீர்க்கதரிசனத்தை நேரடியாகப் புரிந்து கொள்ள முடியும்.**

பவுல் 6 ம் வசனத்தில் அறிவுண்டாகவும், தேவ இரகசியமான சுவிஷேசத்தைச் சொல்லவும் ஏதுவானதைப் பயன்படுத்தாமல் கேட்பவர்களால் புரிந்து கொள்ள முடியாத அந்நியபாஷை பேசுவதால் என்ன பயன் என்று கேட்கிறார். அறிவுண்டாவதற்கும், போதனை அளிப்பதற்குமே, தேவ இரகசியத்தை வெளிப்படுத்துவதற்குமே வரங்கள் பயன்பட வேண்டு மென்பதை பவுல் இங்கு வெளிப்படுத்துவதை கவனிக்க வேண்டும். அவையும் நம்மால் புரிந்து கொள்ளும் படியாக இருக்க வேண்டும். புரிந்து கொள்ள முடியாத எதனாலும் எந்தப்பயனும் இல்லை.

இதை மேலும் விளக்குவதற்காக 7ம் வசனத்திலும் 8ம் வசனத்திலும் பவுல் இரண்டு உதாரணங்களைப் பயன்படுத்துகிறார். முதலாவது இசைக்கருவிகளைப் பற்றியது. புல்லாங்குழல், சுரமண்டலம் போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்துகிறவர்கள் அவற்றை இசையோடு வாசிக்காவிட்டால் அவை எழுப்பும் சத்தம் நாதமாக இல்லாமல் நாரசமாகத்தான் இருக்கும். வெறும் காதைத்துளைக்கும் ஓசையாகத்தான் இருக்கும். அவற்றை ஒருவரும் புரிந்து கொள்ள முடியாது.

இதேபோல் போர் நடக்கும்போது போர்வீரர்களுக்கு சங்கேதமாக செய்தி அளிக்க வேண்டிய எக்காள சத்தமிடுகிறவன் ஏனோதானோவென்று சத்தமிட்டால் அதைப் புரிந்து கொள்ள முடியாத போர்வீரர்கள் யுத்தத்தை சரியாக நடத்த முடியாது (8).

ஆகவே, பவுல் 9ம் வசனத்தில், தெளிவாக எல்லோரும் புரிந்து கொள்ளும்படிப் பேசாமல் நீங்கள் வெறும் ஓசை எழுப்பினால் ஒருவரும் ஒன்றையும் புரிந்து கொள்ள முடியாது. உங்களுடைய பேச்சிலும் எந்தவிதமான அர்த்தமும் இருக்காது என்கிறார். இதைத்தான் "ஆகாயத்தில் பேசுவதுபோல் இருக்கும்" என்பதன் மூலம் விளக்குகிறார். அதாவது, உங்கள் பேச்சு பொருளற்றதாக இருக்கும் என்பது இதன் பொருள்.

உலகத்திலே அநேக பாஷைகள் இருக்கின்றன். ஆனால், அர்த்தமில்லாத மொழிகள் என்று எந்த மொழிகளை யும் குறிப்பிட்டுக்கூறமுடியாது. எல்லா மொழிகளுமே இலக்கணத்தையும், வார்த்தைகளையும் கொண்டு அர்த்தமுள்ளதாக இருக்கும். அந்நியபாஷையும் உலக மொழிகளாதலால் அவை அர்த்தமுள்ளவை. அர்த்த மில்லாத முறையில் அவற்றைப் பயன்படுத்துவது சரியல்ல (10).

இரண்டு பேர் சந்திக்கும்போது அவர்கள் ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளும்படியாக அர்த்தமுள்ள பாஷையில் பேச வேண்டும். ஒருவர் பேசுவதை மற்றவரால் புரிந்துகொள்ள முடியாவிட்டால் அவர்கள் ஒருவருக்கொருவர் அந்நியர்களாயிருப்பார் கள். ஒருவரால் மற்றவரைப் புரிந்து கொள்ள முடியாது. மொழி ஒருவர் பேசி மற்றவர் புரிந்து கொள்வதற்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதையே 11ம் வசனத்தில் பவுல் விளக்குகிறார் (11).

ஆகவே, தேவ சித்தத்தை வெளிப்படுத்தி அறிவை உண்டாக்காத எந்த மொழியில் பேசினாலும் பயனில்லை. அறிவைக் கொடுக்கும் போதனையே ஆத்துமாக்களுக்கு தேவைப்படுகிறது. அவர்கள் கிறிஸ்துவில் வளர அது மட்டுமே தேவை. அத்தகைய செயலைச் செய்ய முடியாத வரங்களை நாடுவதால் எந்தப்பயனுமில்லை. கொரிந்தியர்கள் ஆவிக்குரிய வரங்களை நாடினார்கள். அதில் தப்பில்லை. ஆனால், அவர்கள் தற்பெருமையாலும், சுயநலத்தினாலும் போட்டி மனப்பான்மையுடனேயே அவற்றை நாடினார்கள். சபை வளர்ச்சியைப்பற்றியும், ஆத்துமாக்களின் அறிவு வளர்ச்சியைப்பற்றியும் அவர்களுக்கு எந்தக் கவலையும் இருக்கவில்லை. இதை உணர்ந்த பவுல், அவர்கள் சபைவிருத்திக்கு உதவும் வரங்களை நாடும்படியாக அறிவுறை செய்கிறார். சபை மக்கள் புரிந்து கொள்ளும்படியாக சத்தியத்தை சொல்லக்கூடிய வரங்களை நாடுவதே மேலானது என்று வலியுறுத்துகிறார். சபை மக்களுக்கு பக்தி விருத்தி உண்டாக்காத எதையும் செய்வதால் பயனில்லை என்றும் கூறுகிறார். இதையே 12ம் வசனம் விளக்குகிறது.

(வளரும்)

---

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி - கிறிஸ்தவக் கோட்பாடுகள்)

திணிக்கும்போது நாம் கர்த்தருடைய ஆராதனையைத் தவறான வழியில் செய்து கொண்டிருக்கிறோம் என்பது நமது குழந்தைகளுக்குப் புரிவதில்லை. தாங்கள் தவறான வழியில், மனித ஞானத்தின்படியான ஆராதனை முறைகளில் வழி நடத்தப்படுவதை அவர்களால் அறிய முடியாமலிருக்கிறது. நாமே நமது குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் இடையூராக வந்து விடுகிறோம். இதனால் ஆவியின் வல்லமையை ஆராதனையில் காணமுடியாமலும், நமது குழந்தைகள் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியாமலும் போக நாமே காரணமாக இருந்து விடுகிறோம். இவ்வழியில் போகாமல் மெய்யான ஆராதனை நாம் கர்த்தருக்கு முன்பாக நடத்தும்போது கர்த்தர் அற்புதமாகக் கிரியை செய்து நம்குழந்தைகளுடனே கூட வார்த்தையின் மூலமாக பேசுகிறார். மெய்யான ஆராதனையில் பங்கு கொள்ளும் குழந்தைகள் சத்தியத்தை அறிந்து கொள்ளுகின்றார்கள். மெய்யான ஆராதனையில் பங்கு கொள்ளுவதன் மூலம் மனித ஞானத்தின்படி உருவானவரல்ல கர்த்தர் என்பதை அவர்களால் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது. கர்த்தர் தம்மை வெளிப்படுத்தியுள்ளபடியே அவரை அவர்களால் அறிந்து கொள்ள முடிகிறது. நாம் ஆராதனையை எளிமையாக, முறைப்படி வேதத்தைப் பின்பற்றி நடத்தும்போது முக்கியமாக நமது குழந்தைகள் ஆசீர்வதிக்கப்படுகின்றனர்.

ஆகவே, மெய்யான ஆராதனை கர்த்தர் தன் வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டவற்றை மற்றுமே கொண்டிருக்கும். அவர் வெளிப்படுத்தாதவையும், கட்டளையிடாதவையும் அவரது ஆராதனையில் இடம்பெற முடியாது. இதையே இரண்டாம் கட்டளை கட்டளையிட்டுப் போதிக்கின்றது.

ஐயா! தலித்துக்களுக்கென்று ஒரு கிறிஸ்தவம் என்ற வகையில் பேசுகிறார்கள். இதைப்பற்றி எழுதி விளக்குங்கள் என்று வாசகர் ஒருவர் கேட்டுக் கொண்டார். தமிழ் நாட்டிற்கு வெளியில் இருப்பவர்களுக்கு இது என்ன? என்று புரியாமலிருக்கலாம். ஒடுக்கப்பட்டு, சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள சாதியினர், தொழிலாளர்கள், நாடோடி மக்கள், ஆதிவாசிகள் ஆகியோர் இந்தியாவில் தலித்துக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். யார் உண்மையான தலித்? என்பதற்கு கொடுக்கப்படும் விளக்கங்கள் எல்லாமே ஒத்துப் போவதாயில்லை. இருந்தாலும் பொதுவாக சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் இருக்கும் மக்களை இது குறிக்கின்றது. உயர் சாதியினரால் தலித்துக்கள் பெருந்துன்பங்கள் அடைவது மறுக்க முடியாத உண்மை. இந்திய அரசியல், பொருளாதார சூழ்நிலையும், சாதிக்கொடுமையும் அவர்களைக் காலில் போட்டு மிதித்து வருகின்றது. இந்திய சமுதாயத்தைப் பிடித்திருக்கும் சாதிக் கொடுமை அகற்றப்படாதவரை தலித்துக்களின் தலைவிதி மாறுமா என்பது கேள்விக்குறியே. அம்பேத்கார் தலித்து மக்களின் முன்னேற்றத்திற்காகப் போராடிய மனிதர். வேறு பலரும் இதைச் செய்திருக்கிறார்கள்.

# தலித் கிறிஸ்தவம்

கிறிஸ்தவ திருச்சபைகளில் தலித் இன உணர்வு ஏற்படுவது சரியா? அரசரடி இறையியல் கல்லூரி அதிபர் எழுதுகிறார், “தலித் இன உணர்வு ஏற்படுவதில் தவறு இல்லை” என்று (தலித் விடுதலை இயல்). “தலித்துக்கள் போராட்ட ஆற்றல் பெற அத்தகைய இன உணர்வு துணை செய்யும்” என்று அதிபர் எழுதியுள்ளார். தலித்துக்களுக்கான கிறிஸ்தவம், தலித் இறையியல், தலித் பெண்ணியம் என்பன போன்ற கோஷங்கள் புதிதல்ல. இத்தகைய இனஅடிப்படையிலான கோஷங்களை கிறிஸ்தவ வரலாறு ஏற்கனவே சந்தித்திருக்கின்றது. இலத்தீன் அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலங்களில் எழுந்ததே விடுதலை இறையியல் (Liberation Theology). அச்சமுதாயத்தில் ஏற்பட்ட வர்க்கப்போராட்டத்தில் மிதிக்கப்பட்டவர்களுக்கு விடுதலை காண முற்பட்டது ரோமன் கத்தோலிக்க மதச்சார்புடைய இத்தாராளவாத (Liberal) விடுதலை இறையியல். இது கிறிஸ்துவை நசுக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் ஒரு புரட்சிக்காரராக காட்ட முயல்கிறது. இதைப்போல நம்மக்கள் மத்தியில் உருவானதொன்றே பிராமண எதிர்ப்புணர்வு கொண்ட தெய்வநாயகத்தின் இந்திய வேதங்களில் இயேசுவைக்காணும் தாராளவாத இறையியல். இதெல்லாம் வர்க்க, இனப்போராட்டங்களுக்கு கிறிஸ்தவ வடிவம் கொடுக்கும் முயற்சிகள். இதைப்போன்றதொரு முயற்சியே தலித் இறையியலும், தலித் கிறிஸ்தவமும்.

வேதபூர்வமான கிறிஸ்தவத்தைப் புரிந்து கொள்ளாதவர்களே இத்தகைய கோஷங்களை சமுதாயத்தில் தொடர்ந்து எழுப்பி வந்துள்ளனர். ஆணாதிக்கம், பெண் அடிமைத்துவம், இனவேறுபாடு, வர்க்கப்பிரிவு, பொருளாதாரப் பிரிவு என்பதையெல்லாம் கடந்தது வேதபூர்வமான கிறிஸ்தவம். இயேசுவின் மக்கள் மத்தியில் பார்ப்பனன், தலித் என்ற வேறுபாட்டிற்கே இடமில்லை. உயர்சாதிக்காரனும், தலித்தும் ஒரே இலையில் உணவருந்த எங்கு இடமில்லையோ அங்கு மெய்கிறிஸ்தவம் இருக்க முடியாது. ஏனெனில், வேத பூர்வமான கிறிஸ்தவம் இருக்குமிடத்தில் இனவேறுபாட்டிற்கு இடமிருக்காது. வர்க்க, சாதிப், பொருளாதார வேறுபாட்டையெல்லாம் நீக்கி எல்லோரையும் கிறிஸ்துவின் பிள்ளைகளாகப் பார்க்கும் சமுதாயமே கிறிஸ்துவின் சமுதாயம். திருச்சபைகளில் சாதிப்பாகுபாடு இருக்குமானால் அவை சாத்தானுடைய கூட்டத்தைத்தவிர வேறில்லை. அச்சபைகள் இருப்பதைவிட இல்லாமலிருப்பதே நல்லது. உயர்சாதிக்கொரு திருச்சபை, கீழ்ச்சாதிக்கொரு திருச்சபை என்று சபை அமைக்கும் பெரும் வேதவிரோத செயல்களுக்கு மெய்க்கிறிஸ்தவர்கள் என்றுமே இடம் கொடுக்கக் கூடாது.

தலித்துக்கள் கிறிஸ்துவை அறிந்து கொண்டால் மட்டுமே அவர்களுக்கு தன்மான உணர்ச்சியும், மெய்யான விடுதலையும் ஏற்படும். கிறிஸ்து கொடுக்கும் விடுதலை வெறும் சமுதாய, பொருளாதார, அரசியல் விடுதலை அல்ல. அதையெல்லாம்விடப்பெரிய ஆன்மீக விடுதலை. தலித்துக்களுக்குத் தேவை அவர்களைத் தன்மானத்துடன் வாழ உதவும் கிறிஸ்து மட்டுமே தரக்கூடிய இரட்சிப்பு. கிறிஸ்தவர்கள் இன்று தலித்துக்களுக்காக இறையியல் ஏற்படுத்த முயலாமலும், தலித் பெண்களுக்காக வக்காலத்து வாங்காமலும் வேதம் போதிக்கும் மெய்க்கிறிஸ்தவ விடுதலையை அவர்களுக்கு சுவிஷேசத்தின் மூலம் அறிவிக்க வேண்டும். கிறிஸ்துவை அறிந்து கொண்ட தலித்தை கிறிஸ்துவின் பிள்ளையாக வரவேற்று திருச்சபையில் சரிசமமான இடமளிக்க வேண்டும். கிறிஸ்துவை அறியாத சமுதாயம் காட்டும் வேறுபாடுகளனைத்தையும் கிறிஸ்தவ சமுதாயம் அவர்களுக்கு காட்ட மறுத்து எல்லோருக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். கிறிஸ்துவை அறிந்து கொண்ட தலித்துப் பெண்கள் கிறிஸ்தவ சமுதாயத்தில் ஆண்களுக்கு அடிமைகளாவதில்லை; அவர்கள் ஆண்களால் மதிக்கப்படுவார்கள். பெண்ணீயம் (Feminism) என்பதே ஒரு வர்க்கப் போராட்டம்தானே! அதற்கு கிறிஸ்தவத்தில் இடமில்லை. வேதபூர்வமான கிறிஸ்தவம் பெண்களுக்கு உரியமரியாதை கொடுப்பதால் அங்கு பெண்ணீயம் தேவை இல்லை. கிறிஸ்துவிடம் வந்தபிறகு தலித், தலித்தாக இருக்க முடியாது. அவன் கிறிஸ்துவின் குழந்தையாகிவிடுகிறான். இனி அவன் கிறிஸ்தவனைப்போல் சிந்திக்கப் பழக வேண்டும் இதுவே கிறிஸ்து காட்டும் தலித் விடுதலை! தலித் இறையியல்!

---

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி - கல்வினிச. . . )

விசுவாசத்தைப் பின்பற்றும் சபைகளே வேதபூர்வமாக சுவிஷேசப்பணிபுரியக்கூடியவையாக இருக்கின்றன. இதுபற்றி மேலும் அறிந்துகொள்ள நாம் வெளியிட்டுள்ள திருச்சபை சீர்திருத்தம் என்ற நூலை வாசிக்கவும்.

இவையே சீர்திருத்த விசுவாசம் போதிக்கும் முக்கிய போதனைகள். இனியாவது கல்வினின் பெயரையும், சீர்திருத்த விசுவாசத்தையும் பற்றிப் பேசுபவர்கள் அவை எதைப் போதிக்கின்றன என்று முதலில் அறிந்து கொண்டு அதன்பின் அவற்றைப்பற்றிப் பேசினால் நல்லது. அக்கோட்பாடுகளை நம்பும் நாமும் அக் கோட்பாடுகளுக்காக உயிர் கொடுத்து உழைத்தவர்கள் பெயருக்கும், கர்த்தருடைய பெயருக்கும் களங்கம் ஏற்படாமல் பணி செய்யப் பாடுபடுவோம்.

# "ரெட் டுளிப்"

தமிழ் நாட்டில் சென்னையில் இருந்து நான்கு பக்கங்களைக் கொண்டு வெளிவரும் ஒரு பத்திரிகை "ரெட் டுளிப்" (Red Tulip). இது பற்றி நமது பத்திரிகையில் எழுத வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் "டுளிப்" என்ற பெயரில் வெளி வந்த இப்பத்திரிகை பின்பு "ரெட் டுளிப்" என்ற பெயரில் வெளிவரத் தொடங்கியது. இப்பத்திரிகையின் சில போதனைகள் பற்றி ஆசிரியரின் கவனத்திற்கு சில வருடங்களுக்கு முன்பே கொண்டு வரப்பட்டது. ஆனால், பத்திரிகை கையில் கிடைக்காததால் அதுபற்றி அறிந்து கொள்ளவோ எழுதவோ முடியவில்லை. இப் பத்திரிகையின் பல பிரதிகள் வாசகர்கள் மூலம் இப்போது கிடைத்திருப்பதனாலும், அதில் வரும் கட்டுரைகளை வாசிக்க முடிந்ததனாலும் இது பற்றி எழுத முடிகிறது.

சத்தியத்தை சத்தியமாக விளக்கும் ஆக்கங்களைப் பாராட்டி வரவேற்பது அவசியம். அதேவேளை சத்தியத்திற்கு மாறான கருத்துக்களை திருத்த வேண்டியதும் நமது கடமை. முத்தாட்சண்யம் பார்த்து வேத விரோதக் கொள்கைகளையும், செயல்களையும் திருத்த மறுப்பது நமது மக்கள் மத்தியில் காணப்படும் தவறான வழக்கம். பண்பாடு என்ற பெயரில் இப்பாவத்தைச் செய்து வருகிறோம். ஆத்துமாக்களின் ஆத்மீக வாழ்க்கைக்கு பங்கமேற்படுத்தும் போதனைகளை நாம் எப்போதும் அடையாளம் கண்டு தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவற்றைப் போதிப்பவர்களைத் திருச்சபைகள் ஆதரிக்கக்கூடாது.

"டுளிப்" என்ற பத்திரிகையின் பெயர் கிருபையின் போதனைகளின் ஐங்கோட்பாடுகளின் ஆங்கிலத் தலைப்புகளின் ஆரம்ப எழுத்துக்களாகும் (Tulip). அது ஏன் "ரெட் டுளிப்" என்று அழைக்கப்படுகிறது என்பது தெரியவில்லை. கிருபையின் போதனைகளைக் குறிக்கும் தலைப்புக் கொண்டுள்ள ஒரு பத்திரிகை அது பற்றி விளக்கும் பத்திரிகையாக இருக்கும் என்ற எண்ணத்தில் என் கையில் கிடைத்த பல பிரதிகளை திறந்தமனத்தோடும், ஆர்வத்தோடும் வாசித்துப் பார்த்தபோது பெரும் ஏமாற்றமே காத்திருந்தது. ஏமாற்றமாக மட்டும் இருந்திருந்தால் அது இன்று வெளிவரும் அநேக பத்திரிகைகளுக்கும் பொருந்தும் என்று சும்மா இருந்திருக்கலாம். ஆனால், ஏமாற்றத்தைத் தவிர, ஆபத்தான பல போதனைகளையும் அதில் அடையாளம் காணமுடிந்ததால் ஆத்துமாக்களை எச்சரிக்க வேண்டிய ஒரு அக்கறையுடன் இதை எழுத வேண்டியுள்ளது.

## கற்பனையான வேத விளக்கங்கள்

என் கையில் கிடைத்த இதழ்கள் 1995 - 2000 ஆண்டுகள் வரையிலானவை. இவற்றில் சில இதழ்களை வாசித்தபோதே பத்திரிகையின் போக்கு தெளிவாகப் புலப்படத்தொடங்கியது. நான் வாசித்த இதழ்களில் அளிக்கப்பட்டிருந்த பல வேத விளக்கங்கள் கேள்விக்குரியதாகவும், சில வரம்பை மீறியதாகவும் இருந்தன. உதாரணத்திற்கு, யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்ததைப்பற்றிய (ஏப்பிரல் 1995) விளக்கம் - கல்வாரியில் சிலுவையில் இறப்பதற்கு முன்பு இயேசு கெத்சமனே தோட்டத்திலும், ஏனைய இடங்களிலும் அதிக இரத்தத்தைச் சிந்த நேரிட்டதால் அவரது முகம் இரத்தத்தால் தோய்ந்து அடையாளம் காண முடியாத படி இருந்ததால்தான் சேனைகளாலும், யூதாஸாலும் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை என்ற விளக்கம் வெறும் ஊகம் மட்டுமே. இது வேதம் போதிக்கும் உண்மையல்ல. சுவிஷேசப் புத்தகங்களில் யோவான் இதைக்குறித்து எழுதுகிறார் (யோவான் 18:1-9). அன்று யூதாஸோடு யூதர்கள், ரோம சேனாதிபதிகள், போர்வீரர்கள் என்று அநேகர் (a great multitude) ஒரு மனிதனைப் பிடிப்பதற்காக வந்திருந்தனர். அது இரவு நேரம். ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாத கும்மிருட்டு. கையில் வைத்திருக்கும் தீவட்டிகளின் ஒளியில் மட்டுமே அவ்விருட்டில் ஒருவரை அடையாளம் கண்டு கொள்ள வேண்டியிருந்தது. போர்வீரர்களால் இயேசுவை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் போனதில் எந்தவித ஆச்சரியமுமில்லை. யூதாஸுக்கும் இங்கு எந்தக் குழப்பமுமில்லை. அவனுக்கு இயேசு யார் என்று நன்றாகவே தெரிந்திருந்தது. அவன் இயேசுவை முத்தமிட்டுக் காட்டிக்கொடுத்ததாக மத்தேயு, மாற்கு, லூக்கா அனைவருமே தெரிவிக்கின்றனர். யோவான் இங்கு அதைக்குறிப்பிடாவிட்டாலும் யூதாஸ் அக்கூட்டத்தில் இருந்ததை சுட்டிக்காட்டத்தவறவில்லை. ஆகவே, அத்தனை பெரிய கூட்டத்தில் இயேசு தன்னைத் தேடி வந்தவர்களைப் பார்த்து யாரைத் தேடுகிறீர்கள் என்று தானே முன்வந்து கேட்டதில் எந்தப்புதுமையும் இல்லை. இதுவே இப்பகுதிக்கான சாதாரணமான விளக்கம். இதற்கு வேறு பொருள் கொடுக்க முயல்வது அநாவசியம். வேதத்தை சரியாகப் படித்துப் புரிந்து கொள்ள நாம் முதலில் எதையும் ஊகிக்கும் வழக்கத்தையும், கற்பனை செய்வதையும் கைவிட வேண்டும்.

இன்னுமொரு உதாரணம் - இயேசு, "என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கெத்சமனே தோட்டத்தில் பிதாவை நோக்கிச் சொன்ன வார்த்தைகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கம் புதுமையானது (என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? - ஏப்பிரல் 1995). இது பற்றி விளக்கும் ஆசிரியர், திருச்சபையைத் தேவன் பாவம் செய்ததால் கைவிட்டதாகவும், குமாரனான இயேசு திருச்சபையின் தலையாக இருந்ததால் தனது சரீரமாகிய சபை கைவிடப்பட்டதைத் தனக்கே நேர்ந்ததாகக்கொள்ள நேர்ந்தது என்றும் எழுதியுள்ளார். இயேசு "தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கேட்டதன் மூலம் மரித்துப்போன தனது சரீரமாகிய சபையை உயிர்ப்பிக்கும்படி பிதாவை நோக்கிக் கதறுவதாக விளக்கமளித்துள்ளார் ஆசிரியர். இத்தகைய விளக்கங்கள் உண்மையில் மிகவும் கவர்ச்சிகரமாக அமைந்திருந்தாலும் வேதம் போதிக்கும் கிறிஸ்து பற்றிய இறையியலுடன் எந்தவிதத் தொடர்புமில்லாமல் காணப்படுகின்றது. இயேசு "தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கேட்டதற்குக் காரணம் தான்

சுமக்கப்போகும் தேவகோபத்தின் வன்மையையும், தனது மக்களின் பாவங்களையும் பூரணமாக உணர்ந்த தால்தான். பாவமேயில்லாத நம் ஆண்டவர் தமது மக்களுக்காக ஏற்கப்போகும் தண்டனையின் கோரம் அவரை அப்படிப் பேசச் செய்தது. நடக்கப்போகும் அச்சம்பவத்தால் தம் பிதாவிடமிருந்து தாம் பிரிக்கப் படப்போவதை இயேசு உணர்ந்து கதறினார். இதுவே உண்மை. பாவம் இவ்விதத்தில்தான் இன்று மனிதனைக் கர்த்தரிடமிருந்து பிரித்து வைத்திருக்கிறது. இப்பகுதிக்கு இப்பத்திரிகை ஆசிரியர் அளித்துள்ள விளக்கம் வெறும் கற்பனையே.

இவற்றைவிடவும் மோசமானது பரிசுத்தஆவிபற்றி ஆசிரியர் அளித்துள்ள விளக்கம் (ஜனவரி 2000). இவ்விதழில் பரிசுத்த ஆவி, பரிசுத்த ஆவியானவர் என்ற பதங்கள் ஒருவரைக்குறிக்கும் வார்த்தைகளல்ல; "பரிசுத்த ஆவி" என்ற பதம் ஒரு ஆத்துமாவின் பரிசுத்தமான ஆவியையும், "பரிசுத்த ஆவியானவர்" என்பது திரித்துவக் கடவுளின் மூன்றாம் நபரைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று தவறான ஒரு விளக்கத்தைத் தந்துள்ளார். புதிய ஏற்பாட்டின் மூலமொழியான கிரேக்கத்தில் இவ்விதமாக பிரித்துக் காட்டப்படவில்லை. ஆங்கில மொழிபெயர்ப்பிலும் இவ்வாறு பிரிக்கப்படவில்லை. தமிழ் வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இவ்விரு வார்த்தைப் பிரயோகங்களும் ஒருவரையே (பரிசுத்த ஆவியானவர்) குறிப்பதாகக் கொள்ள வேண்டும். ("பரிசுத்த ஆவியானவர்" என்ற எச். ஜே. ஆப்பில்பீயின் சிறு நூலை வாங்கி வாசிக்கவும்.) அதைவிட நமக்கு "பரிசுத்தமான ஆவி" இருப்பதாக வேதம் எங்குமே போதிக்கவில்லை. தமிழில் பரிசுத்த ஆவியானவர் என்று மரியாதைக்காக நாம் எழுதுவது போல் எல்லா மொழிகளிலும் காணப்படுவதில்லை. ஆங்கிலத்தில் "அவன்" என்று சொல்லவும், "அவர்" என்று சொல்லவும் ஒரே வார்த்தையே பயன்படுத்தப் படுகின்றது. அதை அறியாமல் நாம் புதிது புதிதாக விளக்கங்களைக் கொடுக்க ஆரம்பிக்கக்கூடாது. இப்படிச் செய்தால் வேதத்திற்கு எதிரான தவறான விளக்கத்தையே நாம் கொடுக்க நேரிடும்.

இதே ஆக்கத்தில் "மனிதன் ஆவி, ஆன்மா, சரீரம் ஆகிய கூறுகளையும் நான்காம் நிலையாக உயிரையும் கொண்டிருக்கிறான்" என்று ஆசிரியர் எழுதியுள்ளார். இதற்கு என்னென்னவோ புதுமையான விளக்கங் களையெல்லாம் கொடுத்துள்ளார். வேதம் ஆவி (Spirit), ஆன்மா (Soul), சரீரம் (Body) ஆகிய வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும் ஆவி, ஆன்மா என்ற பதங்களை ஒரே பொருளைக் குறிக்கவே பயன்படுத்துகிறது. மனிதனில் ஆவியும், ஆன்மாவும் ஒன்றே. உயிர் என்ற தமிழ் வார்த்தையையும் ஆவி, ஆன்மாவைக் குறிக்கவே பயன்படுத்த வேண்டும். மனிதன் மூன்று கூறுகள் கொண்டவனோ அல்லது நான்கு கூறுகள் கொண்டவனோ அல்ல; இரு கூறுகளை அதாவது ஆவியையும் (ஆன்மா), சரீரத்தையும் மட்டுமே கொண்டிருக்கிறான். சீர்திருத்த இறையியலாளர்கள் எப்போதுமே இவ்விதமாகத்தான் விளக்கமளித்து வந்துள்ளார்கள் (Dichotomy). விசுவாச அறிக்கையும் இதையே போதிக்கின்றது. இப்போதனைக்கு முரணாக மனிதனில் மூன்று கூறுகள் காணப்படுகின்றன என்று போதிப்பவர்களை Trichotomist என்று அழைப்பர். இவர்கள் எபிரேயர் 4:12ஐத் தமது போதனைக்கு ஆதரவாகப் பயன்படுத்துவர். ஆனால், அவ்வசனம் வேதவசனங்கள் மனிதனை மிக ஆழமாக ஊடுருவி அவனது இருதயத்தில் காணப்படும் அனைத்தையும் ஒன்றுவிடாமல் சோதித்தறிகின்றது என்பதை வலியுறுத்திப் போதிக்கவே ஆவி, ஆன்மா என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளனவே தவிர ஆவி, ஆன்மா என்று இரண்டு பிரிவுகள் மனிதனில் காணப்படவில்லை. தமிழில் எழுதும்போதுகூட நாம் ஒரே பொருளைக் குறிக்கும் இரு வார்த்தைகளை சொல்ல வந்த விசயத்தை வலியுறுத்திச் சொல்வதற் காகப் பயன்படுத்துவதில்லையா? இதேவகையில்தான் எபிரேயர்4:12 அமைந்திருக்கின்றது. மனிதனில் மூன்று கூறுகள் காணப்படுகின்றன என்ற வேதவிரோதமான போதனையே பின்பு கிறிஸ்துவைக் குறித்தும் விசுவாசி களின் பரிசுத்த வாழ்க்கையைக்குறித்ததுமான தவறான போதனைகளுக்கு வழி வகுத்தது.

இத்தகைய முரண்பாடான வேதவிளக்கங்களைத்தவிர இப்பத்திரிகையின் போக்கில் நாம் மிகவும் ஆபத்தான தாகக் கருதும் இரண்டு அம்சங்களை விளக்க வேண்டியது அவசியமாகிறது. முதலாவது, இந்திய வேதங்கள், சாஸ்திரங்கள் மூலம் சுவிஷேச விளக்க மளிக்க முயலும் இதன் முயற்சி. கிருபையின் போதனைகளையும் இப்பத்திரிகை ஆசிரியர் இந்திய சாஸ்திரங்களில் காண முயல்கிறார். இரண்டாவதாக, கிருபையின் போதனைகளை தேவைக்கு மேல் பெரிது படுத்தி அதைப் போதிப்பதற்காக மட்டுமே வேதம் இருப்பதுபோல் காட்டும் முயற்சி. இவை இரண்டை யும் வாசகர்கள் நன்மை கருதி நாம் சிறிது விளக்கத் தான் வேண்டும்.

## இந்திய வேதங்களில் இயேசு!

95, 96 ஆகிய ஆண்டுகளில் ரெட் டுளிப், அறியப்படாத தேவன் என்ற தலைப்பில் சில ஆக்கங்களை வெளியிட் டது. இக்கட்டுரைகளின் மூலம் சுவிஷேசத்தை இந்திய வேதங்களிலும், சமயங்களிலும் காண முயன்றுள்ளார் ஆசிரியர். இப்பணியை ஆரம்பித்து வைத்த பெருமை மு. தெய்வநாயகத்திற்கு உரியது என்று கூறும் ஆசிரியர் தனது சிறு வயது முதல் அநேக சபைப் பெரியவர்கள் சுவிஷேச ஊழியங்களிலும், சபையில் பிரசங்கிக்கும் போதும் சித்தர் பாடல்கள், திருக்குறள் ஆகியவற்றில் இருந்து பவுலடியார் பாணியில் பிரசங்கிப்பதைக் கேட்டுள்ளதாகக் கூறுகிறார். மு. தெய்வநாயகத்தோடு அதிக நெருக்கமுள்ளதாகக் கூறும் ஆசிரியர், "அவரது இலக்கிய ஆய்வுகளில் இருந்து அடியேன் பெற்ற வற்றைக் கொண்டு பவுலடியின் பாணியில் இந்திய மக்களைச் சந்தித்து வருகிறேன்" என்று கூறுகிறார். "இதுவரை இதை எதிர்த்துப் பேசியவர்கள் எவரும் இல்லையென்றும், இந்திய இதிகாசத்தில் விஞ்சி நிற்பது கிறிஸ்துவின் நற்செய்தியே என்று ஒப்புக் கொள்பவர் களே அதிகம்" என்றும் கூறுகிறார். இதன்படி திருக்குறள் மற்றும் இந்திய வேதங்கள், சித்தர் பாடல் களைப் பயன்படுத்தி வில்லுப்பாட்டின் மூலம் சுவிஷேசம் சொல்லி வருகிறார் ஆசிரியர்.

மு. தெய்வநாயகம் மற்றும் சாது செல்லப்பா போன்றோரின் போதனைகள் குறித்து இந்திய வேதங்களில் இயேசுவா? என்ற நூலின் மூலம் நாம் விளக்கமளித்துள்ளோம். (இந்நூல் தேவையானவர்கள் எமக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.) இதுபற்றி மேலும் விளக்கமாக எழுத வேண்டிய அவசியம் இல்லை. கிறிஸ்தவ வேதம் போதிக்கும் சுவிஷேசத்தை உலகின் வேறு எந்த நூலிலிருந்தும் பெற முடியாது, கிறிஸ்தவ வேதத்தின் மூலம் மட்டுமே கிறிஸ்து

வெளிப்படுத்தப்படுகிறார். இதற்கு மாறான எந்தப் போதனையும் கிறிஸ்தவ வேதத்தோடு சம்பந்தமில்லாத போதனையாகும். இந்திய வேத சாஸ்திரங்கள், திருக்குறள், சித்தர் பாடல்களில் நேரத்தைப் போக்கி இயேசுவைத் தேட முயல்வது மணல் சோற்றில் கல் ஆய்வது போன்றதாகும். வேதம் மட்டுமே என்ற வேத போதனையை ஏற்க மறுப்பவர்களுக்கு கிறிஸ்துவோடு எந்தத் தொடர்புமிருக்க முடியாது.

## கல்வினும், திருக்குறளும்

இந்திய தத்துவ ஞானங்களோடு கிருபையின் போதனை களையும், கல்வினுடைய கோட்பாடுகளையும் ஒப்பிட்டுப் பேசலாமா? (பிப்ரவரி 96) இதைச் செய்யுமுன் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய தத்துவ ஞானங்கள் சத்தியமல்ல. அவை மனிதனுடைய கற்பனையில் உருவான மாயப் போதனைகள். அவற்றில் சத்தியத்திற்கு இடமிருந்தால் இன்று நமக்கு வேதம் தேவைப்பட்டிருக்காது. பிரம்ம சூத்திரம் என்பது பிரமன் எத்தனை பொய்யான மனிதனோ அத்தனை பொய்யானது. ஆகவே, இச்சூத்திரங்களுக்கும் சத்தியமான வேதத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. வடக்கு தெற்கைவிட எத்தனை தொலைவில் இருக்கிறதோ அத்தனை இடைவெளி இவ்விரண்டிற்கும் இடையில் காணப்படுகின்றது. இவற்றிற்கு முடிச்சுப் போட்டுப் பார்க்க முயல்வது வீண் செயல். சத்தியத்திற்கும் பொய்க்கும் எப்படி உறவிருக்க முடியும்? வேதத்தில் நமக்கு அறவே நம்பிக்கை இல்லாமல் போனாலொழிய இப்படிப் புறமதங்களி லிருந்தும், புறமத இலக்கியங்களிலிருந்தும் வேத சத்தியங்களுக்கும், கல்வினின் ஐங்கோட்பாடுகளுக்கும் விளக்கங் கொடுக்க முயலமாட்டோம்.

ஜூன் 96 இதழில் திருக்குறளில் கல்வினிசத்தைக் காண முயன்றிருக்கிறார் ஆசிரியர். இங்கு அவர் ஒரு குறளுக்கு தரும் விளக்கத்தில் இரமாயணத்தையும் நுழைத்து ஆன்ம ஈடேற்றத்திற்கு விளக்கமளிக்க முனைந்துள்ளார். இவ்வாறாக கல்வினிசத்திற்கு விளக்கமளிக்க முனைவது அதை மேலும் குழப்பி இல்லாத ஒரு தத்துவஞானமாக மாற்றிவிடும். திருக்குறளிலும், இராமாயணத்திலும் இருந்து கிறிஸ்தவ வேத போதனைகளுக்கு விளக்க மளிக்க முயலும் முயற்சிகளை நாம் ஏற்கனவே திருமறைத்தீபம் மூலமாகக் கண்டித்துள்ளோம். இன்று ஆத்துமாக்களுக்குத் தேவையானது வேதத்தில் இருந்து வேதத்தை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு கொடுக்கப்படும் தெளிவான பிரசங்கம்; இதிகாசமோ, கதையோ, கற்பனையோ அல்ல.

அடுத்ததாக, இப்பத்திரிகை போதிக்க முயலும் கிருபையின் போதனைகளைப் பார்ப்போம். கல்வினுக்கும், ஓவனுக்கும் மதிப்பளித்து அவர்கள் போதனைகளை விளக்க முயல்வது பாராட்ட வேண்டிய ஒரு செயல். ஆனால், இப்போதனைகளை விளக்கமுயலுமுன் அவற்றை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். முதலில், கிருபையின் போதனை களுக்கு சொந்தக்காரர் கல்வின் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவை, வேதம் போதிக்கும் போதனைகள். இரட்சிப்பு மனிதனுடைய கிரியை களினால் ஏற்படுவதல்ல; இறை ஆண்மையுள்ள கர்த்தர் தனது மகா இரக்கத்தின் காரணமாக மனிதனுக்குப் போடும் பிச்சை என்பதே கிருபையின் போதனைகளின் அடிப்படை வாதம் (எபேசியர் 2:8-10). இன்று சுவிஷேச ஊழியங்கள் அனைத்தும் இப் போதனைகளுக்கு முரணாக நடந்து வருவது நாமறிந்த உண்மையே. இப்போதனை மிக சத்தியமானதும் அவசியமானதுமாக இருந்தபோதும் வேதம் இதை மட்டுமே போதிப்பதாக எண்ணிவிடக்கூடாது. கிறிஸ்தவத்தின் அடிப்படையான இப்போதனைகள் மகா சமுத்திரம் போல் விரிந்தும் ஆழமாகவும் காணப்படும் வேதத்தின் ஒரு பகுதி மட்டுமே. இப்போதனைகளை மட்டுமே வைத்துக் காலம் தள்ளி விட முடியாது. இப்போதனைகளை மட்டும் விசுவாசிப்பதால் ஒருவர் சீர்திருத்தக் கோட்பாடுகளை முழுமையாக அறிந்து கொண்டவ ராகவோ அவற்றை விசுவாசிப்பவராகவோ கருத முடியாது. ஆகவே, கல்வின் கிருபையின் போதனை களை மட்டுமே போதித்தார் என்பது போன்ற ஒரு தோற்றத்தை நாம் ஏற்படுத்தக்கூடாது. அது கல்வினுக்கு நாம் செய்யும் மரியாதையாக இருக்காது. கல்வின் எழுதிய கிறிஸ்தவ வேதபோதனைகள் (The Institute of Christian Religion) என்ற நூலை ஆங்கிலத்தில் வாசித்துப் பார்ப்பவர்களுக்கு இது புரியும். (இது பற்றிமேலும் விளக்கமாக இவ்விதழில் "கல்வினின் ஐங்கோட்பாடு களும், சீர்திருத்தவாதமும்" என்ற ஆக்கத்தில் விளக்கியுள்ளோம்.)

இன்று ஆத்துமாக்கள் அறியத் துடிப்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே. வேதம் போதிக்கும் கிறிஸ்து யார்? என்பதை அறியாத மக்களாக இன்று நம் மக்கள் இருக்கிறார்கள். மத்தேயு 28:18-20 வரையுள்ள பகுதி களில் கிறிஸ்து போதிக்கும்படி கட்டளையிட்ட எல்லா உபதேசங்களையும் நமது மக்கள் அறிய வேண்டியவர் களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேதம் போதிக்கும் சபையோ, சபை வாழ்க்கையோ தெரியாத புதிராக இருக்கின்றது. "கூடில்லாக் குருவிகளாக" அறியாமையால் சுயாதீன ஊழியங்களை ஏற்படுத்தி எதை எதையோ செய்து கொண்டிருக்கும் அவர்களுக்கு கல்வின் போதித்த கட்டுப்பாடுடன் அமைந்த சபைத் தத்துவம் தேவையாக இருக்கிறது. கல்வின் தன்னைக் கட்டுப்பாட்டுடன் உட்படுத்திக் கொண்ட சபைக்கு அவர்களும் தங்களை உட்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. மொத்தத்தில் புரியாத புதிர்போல் அவர்களுக்குக் காட்சியளிக்கும் வேதம் முழுவதும் உள்ளது உள்ளபடி போதிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதில் ஒரு பகுதி மட்டுமே கல்வினிசம். வேதம் மட்டுமே சர்வ அதிகாரம் கொண்டது, வேதம் மட்டுமே போதுமானது என்று நாம் நம்புவோமானால் கல்வினுடைய ஐங்கோட்பாடு களை மட்டும் போதிப்பதில் நாம் சாம்பியன்களாக இருக்க முயல மாட்டோம். அதுவும் ஐங்கோட்பாடு களை இந்திய சித்தாந்தங்களின் மூலம் விளக்க முனைவது கல்வினை அவமதித்து வேதத்தை நிராகரிப்பதற்கு ஒப்பானதாகும்.

தவறான போதனைகள் அவை எங்கிருந்து வந்தாலும் ஆத்துமாக்கள் அவற்றிற்கு இடம் கொடுக்கலாகாது. ஆத்துமாக்கள் சத்தியத்தில் மட்டுமே வளர வேண்டும். சத்தியத்தை எவரும் அறைகுறையாக போதிக்கக்கூடாது. அது நிலைதளும்பாமல் வேதத்தில் உள்ளபடி போதிக் கப்பட வேண்டும். சத்தியத்தை விளக்க நமக்கு கற்பனா சக்தியோ, வார்த்தை ஜாலமோ இதிகாசங்களோ, சித்தர் பாடல்களோ தேவையில்லை. வேத சத்தியத்தை வேதத்தோடு ஒப்பிட்டுப்பார்த்துப் புரிந்துகொண்டு விளக்க வேண்டும். சத்தியம் போல் தோற்றமளிக்க முயலும் அசத்தியத்தை உணர்ந்து புரிந்து கொள்ளும் வக்கிரம் இல்லாத ஆத்துமாக்களாக நம்மவர்கள் இருப்பதே இன்று நம்மைப் பிடித்திருக்கும் சாபக்கேடு.

# எண்ணங்கள்!

கிறிஸ்துவின் விலைமதிப்பில்லாத நாமத்தில் எனது வணக்கங்கள். உங்களுடைய பத்திரிகைக்கு நன்றி. எனக்கு அநேக போதனைகளைத் தந்து கட்டியெழுப்புகின்ற திருமறைத்தீபத்திற்கு என் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் மேசையில் சில பத்திரிகைகளுக்கே நான் இடம் கொடுக்கிறேன். அவற்றில் திருமறைத்தீபமே சிறந்தது. கிராமத்து போதகர்களுக்குப் பயன்படுமாறு பத்திரிகையிண் பிரதிகளையும், நீங்கள் வெளியிட்டுள்ள ஏனைய அக்கங்களையும் அனுப்பி உதவுங்கள்.

*போல் எசேக்கியல், தமிழ் நாடு*

இணைய தளத்தில் திருமறைத்தீபம் தளத்தைப் பார்த்தேன். அது உலகெங்குமுள்ள தமிழ் கிறிஸ்தவர்களுக்குப் பயன்படும் என்று நம்புகிறேன். தயவு செய்து உங்கள் வெளியீடுகளை எனக்கு அனுப்பி உதவுங்கள். அவற்றை வாசிக்க ஆவலாயிருக்கிறேன்.

*எம். குமாரசாமி, தமிழ் நாடு*

நாங்கள் குஜராத்தில் ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிறோம். போதகரான நண்பர் ஒருவர் மூலம் திருமறைத்தீபம் பத்திரிகை கிடைத்தது. அதன் ஆக்கங்களை வாசித்து அவற்றால் ஆசீர்வதிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டோம். தயவு செய்து பத்திரிகையையும், ஏனைய வெளியீடுகளையும் அனுப்பி உதவுங்கள்.

*போல் ஜே. சிங் தம்பதிகள். குஜராத்*

திருமறைத்தீபம் தொடர்ந்து கிடைக்கின்றது. ஜோர்ஜ் விட்பீல்டின் வாழ்க்கையின் சிறு பகுதியைப் படித்தேன். முதன் முதலில் திறந்த வெளிப்பிரசங்கத்தை ஆரம்பித்து வைத்தவர் என்று அறிந்து சந்தோஷப்பட்டேன். கிருபையால் மாத்திரம் இரட்சிப்பு என்ற உபதேசத்தை நம்பியவர்கள் இப்படிப்பட்ட ஊழியத்திலும் பயன்படுத்தப்பட்டார்கள் என்பது வியப்பைத்தந்தது. பத்திரிகை ஊழியத்திற்காகத் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

*சாமுவேல் மனோகரன், தமிழ் நாடு*

நான் ஒரு திருப்பணியாளன். நீங்கள் வெளியிடும் திருமறைத்தீபம் இதழை நூலகத்தில் பார்த்தேன். மிகவும் பயனுள்ள இதழ். இன்றைய கிறிஸ்தவத்திற்கு ஏற்ற இதழ். தியானங்களும், வாழ்க்கைக் குறிப்புகளும், இறையியல் பகுதிகளும் பொக்கிஷமாக சேர்த்து வைக்கப்பட வேண்டியவை. இவ்விதழை எனது முகவரிக்கு தயவு செய்து அனுப்பி உதவுங்கள்.

*ஜெஸ்லர் ரோய், தமிழ் நாடு*

தற்செயலாக திருமறைத்தீபம் இதழைக் கண்ணுற்றேன். இன்றைக்கு திருச்சபைகளில் இருக்கின்ற பல்வேறு பிரச்சனைகளுக்கும் குழப்பங்களுக்கும் தெளிவான செய்திகளை அளிக்கின்றது. இதுவரை வெளிவந்த இதழ்களை அனுப்பி வைத்தால் நல்லது. ஆவன செய்யுங்கள்.

*அருள்திரு. எம். எஸ். இராஜா, தமிழ் நாடு*

*(எண்ணங்கள் பகுதியில் வரும் கடிதங்களை நாம் வரவேற்கிறோம். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கும் உங்களை, உங்கள் கடிதங்கள் மூலமாகவே நாம் அறிந்து கொள்கிறோம். உங்கள் மடல்களும், ஜெபங்களும் எம்மை இப்பணியில் ஊக்குவிக்கின்றன. நன்றி. – ஆசிரியர்)*



## உள்ளே . .


1. கல்வினிச ஐங்கோட்பாடுகளும், சீர்திருத்த விசுவாசமும்
2. கிறிஸ்தவக் கோட்பாடுகள்
3. ஆதிக் கிறிஸ்தவம்
4. வில்லியம் கேரி
5. தலித் கிறிஸ்தவம்
6. 1 கொரி. 12-14
7. “ரெட் டுளிப்”
8. எண்ணங்கள் !